# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008

பதிவு இலக்கம் : 361910

காற்று : 13 சுகந்தம் : 46 (ஆடி - புரட்டாதி) 2020




தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!



ரூபா. 86,000 ஐச் செலுத்தி
மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்
YAMAHA
Revs Your Heart
FZ-S FI
ABS
FZ FI
03 FREE SERVICE
FREE
FREE
568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848
காட்சியறைகள் வாழைச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, வவுணதீவு 077 332 2570
மாபெரும் விலைக் கழிவுக் கொண்டாட்டம்
ரூபா. 50,000 ஐச் செலுத்தி
Scooter ஒன்றினை கொண்டு செல்லுங்கள்
64 ஆண்டு விழா
YAMAHA
Revs Your Heart
YAMAHA PLAZA
Sales, Service & Spare Separts
AD / 0045
2 YEAR WARRANTY
fascino
RAY ZR
முன் டிஸ்க் பிரேக்கும்
அலோய் வீல்களும்
புதிய டிஜிட்டல் மீட்டர்
நக்கிள் கார்ட்
21L ஆசனத்துக்குக் கீழான
பெரிய பொதியறை
1L க்கு 66Km ஓடக்கூடிய எரிபொருள்
சிக்கனத்திறனான என்ஜின்
568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848
காட்சியறைகள் வாழைச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, வவுணதீவு 077 332 2570

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077 – 6983597
பெக்ஸ் : 065 – 2227542
Email : kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி. கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி. த.செல்வராணி

**ஓவியம்**
சி.புரவர்த்தனி

**கணினி வடிவமைப்பு**
சு. தீபன்

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)

## கொரோனா கற்றுத் தந்த பாடம்!

மனித வாழ்க்கையைப் பெரும் மாற்றத்திற்கு உள்ளாக்கியதில் முக்கிய பங்கு கொரோனாவுக்கு உண்டு எனக் கூறினால் அது மிகையாகாது.

தன்மீதும், தன் குடும்பத்தின் மீதும் எதுவித அக்கறையுமில்லாமல் திரிந்தவர்களைக் கூட, இக்கால கட்டத்தில் தம் உறவுகள் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்க கொரோனா வைத்துள்ளது.

ஊரடங்கு காலப்பகுதியில், அந்த நெருக்கடியான சூழலில் நாட்டு மக்களின் நன்மை கருதிச் செயற்பட்ட பாதுகாப்புத் தரப்பினர் இன்று கொரோனாத் தொற்றுக் குள்ளாகியுள்ளனர். இந்நிலையில் அவர்களின் உறவுகளின் நிலை என்னவாக இருக்கும். சற்று யோசித்துப் பாருங்கள்.

நாமோ எதனையும் அறியாதவர்களாய், ஆராயாதவர்களாய் **“ஊரடங்கு எப்போது தளர்த்தப்படும்.. என்றைக்கு வெளியில் செல்லலாம்”**– என்ற மனோநிலையில் இருக்கிறோம்.

உண்மையில் இது நமக்கும், நம் குடும்பத்துக்கும், நாம் வாழும் சூழலுக்கும் வழங்கப்படும் அதி உச்ச பாதுகாப்பு என்பதை ஒவ் வொருவரும் உணர வேண்டும்.

எனவே, நம் வீட்டிலாகட்டும், பொது இடமாகட்டும்.. எங்கே இருப்பினும் சமூகப் பொறுப்புடன் நடந்து கொரோனாவை விரட் டியடிப்போம்!

என்றென்றும் அன்புடன்
- ஆசிரியர் -

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 500/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் **"தென்றல்"** இலவசமாக வழங்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக் கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு

- க. கிருபாகரன் -

# தென்றலின் தேடல்



தில்லைநாதன்

சத்தியநாதன் பத்மநாதன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும், வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் திருப்பழுகாமத்தில் பிறந்து, **"நாதன்ஸ் இசைக்குழு"**வை ஆரம்பித்து, அதன் மூலமாகப் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் சகோதரர்களான தில்லைநாதன் பத்மநாதன், சத்தியநாதன் ஆகியோரைத் **"தென்றலின் தேடல்"**வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமையும், பேருவகையும் அடைகிறது.



**கலைத் துறைப் பயணம்**

1969 ஆம் ஆண்டு தில்லைநாதன் பத்மநாதன் அம்பாறையில் வேலை செய்யும் காலத்தில் அங்கு **"வொஷன்"** நிகழ்வைக் கண்டு களிக்கச் சென்றுள்ளார். அந்நிகழ்ச்சியில் **"டோல்கி"**– வாசிப்பதன் அழகை இரகசித்து, வீதியோர விற்பனைக் கடையொன்றில் **"டோல்கி"** - வாங்கி பழுகாமத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இதனூடாக பத்மநாதன் **"டோல்கியில்"**– உம், சத்தியநாதன் **"மௌத் தோக்கன்"** இலும் இணைந்து திருப்பழுகாமம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் பல்வேறு இசைப்பிரியர்களின் இசைப்பசிக்கு விருந் தளித்தனர்.

இவ்வேளையில் திருப்பழுகாமத்தைச் சேர்ந்த சாமித்தம்பி தர்மரெட்ணம் ஆசிரியர் இசையார்வம் காரணமாக இவர்களுடன் இணைந்து கொண்டு திருப்பழுகாமம் கிறிஸ்தவ தேவாலயத்தி லிருந்த **"சிறிய ஆர்மோனியம்"**– ஒன்றை பெற்றுக் கொடுத்துள்ளார். அப்போது அவர் **"நீங்கள் உங்கள் நிகழ்ச்சியைச் செய்ய இதை உபயோகிப்பதோடு, எமது கிறிஸ்தவ தேவாலய கரோல்ட் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இவ் ஆர்மோனியம் மூலம் இசையமைக்குமாறும் கேட்டுக் கொண்டார்"**– எனப் பத்மநாதன் **"தென்றல்"**– உடன் பகிர்ந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சாமித்தம்பி தர்மரெட்ணம் ஆசிரியருடன் கல்லாறு கிறிஸ்தவ தேவாலயத்துக்குச் சென்று, **"பெரிய ஆர்மோனியம்"**- ஒன்றைப் பார்வையிட்டு அதனை வாங்கிக் கொண்டனர். இவ்வாறு ஆர்மோனியம், டோல்கி மற்றும் பல்வேறு இசைக் கருவிகளுடன் **"நாதன்ஸ் இசைக்குழு"** பரிணாம வளர்ச்சி பெற்றது.

இக்காலகட்டத்தில் திருப்பழுகாமத்தில் கலை நிகழ்வுகளை நடாத்திக் கொண்டிருந்த அண்ணா கலாமன்றத்தின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் **"நாதன்ஸ் இசைக்குழு"**- பின்னணி இசை வழங்கிக் கொண்டிருந்தது.

இவ்வாறாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற **"நாதன்ஸ் இசைக்குழு"**- வில் எட்டுப் பேர் இணைந்து கொண்டனர். இவர்களைக் கொண்டு **"நாதன்ஸ் இசைக்குழு"**- வின் கன்னி இசை நிகழ்ச்சியாகத் திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு, இடம்பெற்ற தவநிலை வைபவத்தில் அரங்கேறியது.

பின்னர் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக இவர்கள் கல்லடிக்கு இடம்பெயர வேண்டிய நிலையேற்பட்டது. இந்நிலையில் 1970, 1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லடியிலுள்ள பல்வேறு இந்து ஆலயங்களிலும் இசை நிகழ்ச்சிகளை நடாத்தினர். இவை முழுவதுமாகப் பக்திப் பாடல்களாக அமைந்திருந்தது.

இக்காலகட்டத்தில் பத்மநாதன் அம்பாறையில் தனது நண்பனான அன்டனிடமிருந்து வாங்கிய **"எக்கோடியன்"**- மூலம் இசைக்குப் புது வடிவம் கொடுத்தார் சத்தியநாதன்.

நாதன்ஸ் இசைக் குழுவின் வளர்ச்சிப் போக்கின் அடிநாதமாக 1972 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற ரிக்கற் நிகழ்ச்சி அமைந்தது எனக் கூறினால் அது மிகையாகாது. இந்நிகழ்ச்சியில் இவர்களுடன் கல்லடியைச் சேர்ந்த நல்லரெத்தினம் குருராசரெத்தினம், ந.மகேஸ்பரராஜா, வேவிசிங்கம் குமார் மற்றும்

**இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளா மல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய- சஞ்சிகை- இசை- நாடக- நாட்டிய- கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகஞ் செய்யும் வகையிலேயே "தென்றலின் தேடல்"- எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

செட்டிபாளையத்தைச் சேர்ந்த பூ.நாராயணபிள்ளை உட்படச் சிலர் இணைந்து இசையமைத்திருந்தனர்.

இத்தகைய பெருமைகள் பொருந்திய **"நாதன்ஸ் இசைக்குழுவின்"**- சிறப்பைக் கேள்வியுற்ற பதுளையைச் சேர்ந்த நணபரொருவர் பதுளை, பண்டாரவளை, கன்னவரள்ள ஆகிய இடங்களில் தீபாவளி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு உந்து சக்தியாக விளங்கினார். இவ்வாறாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ச்சிகளை நடாத்தி, உலகளாவிய ரீதியில் **"நாதன்ஸ் இசைக்குழு"** புகழ்பெற வழிசமைத்தது.

பின்னர் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இவர்கள் புலம் பெயர்ந்து கனடா சென்று அங்கே பல பாடகர்கள் பாட, இசை நிகழ்ச்சிகளை நடாத்தினார்கள்.

இவ்வாறாக அகவை ஐம்பதில் கால்பதிக்கும் **"நாதன்ஸ் இசைக்குழு"**-வின் ஸ்தாகர்களான தில்லைநாதன் பத்மநாதன், சத்தியநாதன் ஆகியோரின் கலைப் பயணம் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"**- மனம் திறந்து வாழ்த்துகிறது.

-கவிதை-

# மறந்தாயோ மானிடனே..!

-சசியாரதி, கன்னன்குடா-

ஆண்டவன் படைப்பினில்
ஆனதே இரு ஜாதி!
ஆணென்றும் பெண்ணென்றும்
அவைதானே பொது நீதி!
பேதங்கள் பேசிடும்
பேதமை மனிதா!
சாதனை செய்வாயோ
சாதியால் கூறடா..!
உடலதை இயக்கிடும்
உயிரதும் உதிரமும்
உனக்கும் எனக்கும்
ஒரே ஜாதி தானடா!
கடலதைப் பிரிப்பாயோ
கல்லறை போட்டு நீ!
சடலத்தில் காண்பாயோ
சாதி என்ற ஒன்றை நீ!
இலங்கை அன்னை ஈன்றெடுத்த
ஈரண்டு பிள்ளைகளே!
இந்து பௌத்தம் கிறிஸ்தவம்
இஸ்லாம் என்றும் வேறுபட்டோம்!
மதத்தால் வேறுபட்டிடினும்
மனத்தால் பாகுபாடு காட்டி!
சினத்தால் நாம் அழிவதைத் தாய்
சிந்தையது தாங்கிடுமோ?
கடலென்றும் புயலென்றும்
கனத்த மழை தானென்றும்
சினம் கொண்டு தானழித்தாள்
சிந்தையிதை மறந்ததுவோ..?

-சிறுகதை-

# காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்!

-தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா-



அன்று காலை பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்த சுந்தருக்கு, அந்தப் பேட்டியைப் பார்க்கப் பார்க்க மின்சாரம் தாக்குவது போல் இருந்தது. நீரின் முக்கியத்துவம் பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் குறிப்பிட்டு அந்த அதிகாரி பேட்டி கொடுத்திருக்கும் பத்திரிகை அவன் கையைச் சுட்டது. மேடையில் தன் பரிவாரங்கள் சூழ, ஒலிவாங்கி முன் உள்ள மேசையில் தனது ஒரு கையை ஊன்றியவாறு, இருக்கும் அவரது புகைப்படங்களைக் கண்டவுடன், சுந்தருக்கு ஆத்திரம் வந்தது.

தோட்டம் மழையால் பாதிக்கப்பட்டிருந்த பொழுது, மாவட்ட அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். மின்சார வசதி, குடிநீர்வசதி எல்லாம் செய்து தருவோம் எனக்கூறி, லயத்தில் இருந்த சிலரிடம் தோழமையாகப் பழகுவது போல நடித்துப் பத்திரிகைக்காகப் போட்டோவும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். தோட்டத்து மக்கள் யாவரும் அவர்கள் சொன்ன சொல்லை நம்பி, தமது சோகம் தீர்க்க வந்த மகான்கள்- என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். போலி அறிக்

கையை விட்டுச் சென்ற அந்த அதிகாரிகள் அதன் பிறகு அந்தப் பக்கத்துக்கே வரவில்லை.

"எலக்ஷன்" காலத்தில் மட்டும் என்னமாய் வந்து நடித்து பந்தம் பிடிப்பார்கள் "ராஸ்கல்" இப்போ மனுஷன் போய் நின்னா கண் ணுக்கு விளங்காது இவனுங்களுக்கு. இன்னொரு முறை தேர்தல் வராமலா போயிடும். அப்போ பாத்துக்கலாம். சுந்தரின் மனசு குமுறியது. ஆச்சி மெதுவாக வந்து பத்திரிகையை எட்டிப் பார்த்தாள். சுந்தர் ஏன் கோபமாக இருக்கிறான் என்பது புரிந்தது. எனினும் சமாளித்துக் கொண்டு, அவனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

**"என்ர மவராசா' உன் கோபம் எனக்குப் புரியுதப்யா. ஆனா.. உன் வாழ்க்க வீணாக் கழியப்படாது ராசா. இந்தக் கிழவி சாக முன்னால முறயா ஒரு கல்யாணம் பண்ணி, எனக்குக் கொள்ளுப் பேரனப் பெத்துத் தா அப்பு.." "கொஞ்சம் சும்மா இரு ஆச்சி. எப்பயும் ஒனக்கு இதே பேச்சுதான். திடீர்னு எங்க போயி பொண்ணத் தேட, அப்பிடித்தான் தேடினாலும் தண்ணியில்லாத இந்த லயத்துக்குள்ள வந்து எவ நிப்பா?"** சுந்தரின் சூடான வார்த் தையைக் கேட்டதும், ஆச்சிக்கு இதயம் கனத்தது. அவன் சொல் வதிலும் பிழையில்லை தானே..?

இந்த லயத்து மேட்டுல வந்து குடித்தனம் பண்ண எவதான் விருப் பப்படுவா? விருப்பத்தோட வந்த வேதவல்லியும் என் மவன் சண்முகத்துடனேயே சாமிக்கிட்டப் போய்ச் சேர்ந்திட்டா.. என் தாயி ! மருமவ போலயா என்னப் பாத்துப்பா? மகள் போல எங்கூட இருந்து ஒத்தாச செய்வாளே..

ஆச்சிக்குப் பழைய நினைவுகள் நெஞ்சில் அலைமோதின. அவளது மகன் சண்முகம் இந்த லயத்தின் மேம்பாட்டுக்காக பட்டபாட்டைத் தான் சுந்தரும் படுகின்றான் என்று ஆச்சிக்குத் தெரியும். ஆனால் எதைச் செய்தும் வெற்றி பெறாமல், அற்ப ஆயுளில் இறந்து போன தன் மகன் சண்முகத்தைப் பற்றியும், மருமகள் தேவவல்லியைப் பற்றியும், நினைத்த போது அவளது விழியோரம் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

சுந்தரின் அப்பா சண்முகம் சமூக அக்கறை மிக்கவர். யாருடைய பிரச்சினையைக் கேட்டாலும், அதைத் தீர்த்து வைப்பதற்குத் தன்னா லான உதவிகளை வஞ்சகமின்றிச் செய்பவர். முன்பொருநாள் கூட, இந்த லயத்தின் பாதை சீரின்மையால் மக்கள் படுகின்ற பிரச்சினை களைக் கிராம சேவகரிடம் கூறி, அதற்கான ஆரம்ப கட்ட வேலை களைச் செய்யுமாறு பேசிப் பார்ப்பதற்காகத்தான் கிராம சேவகர் அலுவலகத்திற்குச் சென்றிருந்தார். அவர் சென்று பல மணி நேரம் கடந்தும், கிராமசேவகர் வரவில்லை. அங்கிருந்த மற்றவர்கள் சண்முகத்தை முறைத்துப் பார்ப்பதும், கேள்வி மேல் கேள்வி கேட் பதாகவும் இருந்தார்கள். **"லயத்தானுக்கு வேற வேலயில்ல. ரோடு பிரச்சின"**– என்று அவர்களுக்குள் கருத்து பரிமாறிக் கொள்ளப்பட்டதை சண்முகமும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். லயத்தான் என்றால் என்ன?

அவன் மனிதன் இல்லையா? அவர்களுக்கென்று ஆசாபாசங்கள் இல்லையா? குடும்பம், பிள்ளை என்று அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறதுதானே? காலங்காலமாக அடிமைப்பட்டு, வாழ்வது எமது சமூதாயத்தின் தலையெழுத்தா? கண்டவன், நிண்டவனிடம் எல்லாம் கைகட்டி வாய்பொத்தி வேலை செய்வதும், காணும் நேரத்தில் எல்லாம் குனிந்து, மடிந்து சலாமுங்க என்று சொல்லியும் வாழ்ந்து முடிந்த மூதாதையர் மீது சண்முகத்துக்குக் கடும் எரிச்சல் வந்தது.

அவர்கள் பழகிய பழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்க வேண்டுமா? இல்லையே. அப்படி ஒரு சட்டம் எங்கும் எழுதி வைக்கப் படவில்லையே? நாட்டின் அன்னிய செலாவாணியைப் பெற்றுத் தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற தோட்டத்து மக்களை மனிதப் பிறவிகளாக எந்தக் காலத்தில் யோசித்திருக்கிறார்கள்? அவர்களது வளமான வாழ்வு பற்றி எவர்தான் அக்கறை காட்டியிருக்கிறார்கள்? வெயிலும், மழையும், பனியும், காற்றும் மட்டுமே அந்தத் தொழிலா ளர்களின் சுயம் அறியும். வியர்வை என்றால் "ஏசி"– அறையில் தூங்கும் சுகம்.

குளிர் என்றால் பஞ்சு மெத்தையில் படுக்கும் இதம். இவை எல்லாவற்றையும் வாழ்வில் ஒரு நாளாவது இந்த ஏழை மக்கள் அனுபவித்திருக்கிறார்களா? அட்டைக் கடியிலும், பாம்புப் புற்றுக்களிலும்

இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முழங்கால் அளவுக்குப் பொலித்தீன் பைகளைக் கட்டிக் கொண்டு, முதுகு வலிக்க வலிக்க தேயிலைச் சுமை சுமக்கும் அந்த அப்பாவி ஜீவன்கள் மீது கருணை காட்ட எந்தத் தலைவன் முன்வந்தான்? காலங்காலமாகத் தேர்தல் காலங்களில் மாத்திரம் இந்தத் தோட்டங்களில் பாதம் வைத்து போலிப்பாசம் காட்டி, இறுதியில் ஏமாற்றும் இந்த வித்தைக் காரர்களைத் தொடர்ந்தும் தலைவர்களாக ஏற்றுக் கொண்டிருப்பது யார் குற்றம்?

உலகம் இன்று எவ்வளவோ முன்னேறிக் கொண்டு வருகிறது. **"இன்டர்நெட், ஈ-மெயில்"**- என்றெல்லாம் சொல்கிறார்கள். தோட்டத்துப் பாடசாலைகளில் இந்தக் கல்வி போதிக்கப்படுகிறதா? வழமையான பாடங்களே பாடசாலைகளில் ஒழுங்காக நடப்பதில்லை. அப் படியிருக்கத் தோட்டத்துப் பாடசாலைகளில் கல்வி நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

காலில் செருப்பில்லாமலும், புத்தகப்பையில்லாமலும் வருகின்ற அப்பாவி மாணவர்களை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்கவும், பிரம்பினால் தோலுரிக்கவும் தெரிந்த ஆசிரியருக்கு அந்த மாணவ னின் வீட்டு நிலவரத்தைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்து வைத் திருப்பாரா? வேண்டாம். தெரிந்து கொள்ள முயற்சியாவது எடுத்திருப் பாரா? ஐந்து பிள்ளைகளின் சாப்பாட்டுத் தேவையையே பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடும் ஒரு குடும்பத்துக்குள் இருந்து கல்வி கற் பதற்காக புறப்பட்டு வரும் அந்த மாணவனை தட்டிக் கொடுக்க ஒரு நாதியுமில்லை. ஆனால் **"அயன்"**- கலையாத ஆடையுடனும், **"பொலிஸ்"**- பண்ணப்பட்ட சப்பாத்துடனும் வரும் ஒரு சில மாண வர்களுக்கு ஆசிரியர்கள் என்னே கௌரவம் கொடுக்கிறார்கள்?

அப்பப்பா..

**"மாத்தியா என்டலு"- (ஐயா! வரச் சொல்கிறார்)**

சிந்தை கலைந்த சண்முகம் கிராமசேவகரின் மேசையருகில் வந்து, பவ்வியமாக நின்றார். அந்த மேசையின் வலது புறத்தில் பல கோப்புக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இடது புறத்தில் கறை படிந்த தொலைபேசி ஒன்று இருந்தது. ஆதிகாலத்து மின்விசிறி ஒன்று தன் இறக்கைகளைப் பரத்தியவாறு **"லொடக், லொடக்"**- என்ற சத்தத்துடன் சுற்றிக் கொண்டிருந்தது. ஒரு கிளாசில் தண்ணீர் நிறைத்து, அதைப்

"பீரிஸ்"- ஒன்றினால் மூடிவிட்டுச் சென்றான் அலுவலகப் பையன். கிராமசேவகர் மேற்சட்டையில் "பட்டன்கள்"- இரண்டைக் கழற்றியவாறு, காற்று வாங்கிக் கொண்டிருந்தார். அவரது "கறுத்த உடம்பிலும், அடர்த்தியான மீசை அரும்பிலும் கொட்டி விடப் போகிறேன் என்பதைப் போல", வியர்வை பெருக்கெடுத்திருந்தது. தண்ணீரைக் குடித்துக் கொண்டு, சண்முகத்தை ஏறிட்டு நோக்கினார் அவர்.
"பெயர் என்னாது?"
"சண்முகம் சேர்.."

"உக்காருங்க.. நீங்க எங்கருந்து வாறது?"
சண்முகம் தனது தோட்டத்தின் பெயரைச் சொன்னார்.

சற்று அதிர்ந்த அந்தக் கிராமசேவகர் சண்முகத்தை நிமிர்ந்து பார்த்தார். ஏனெனில் பல காலங்களாக இந்தப் பிரச்சினை பற்றி இவருக்கு முன்பிருந்த கிராமசேவகரிடமும் தெரிவித்ததாகி விட்டது. எனினும் இன்னமும் அதற்கான ஒரு தீர்வும் எட்டப்பட்டிருக்கவில்லை. அதை அறிந்திருப்பார் போலும். தொண்டையைச் செருமிக் கொண்டு அவரே பேசினார்.

"ரோடு பிரச்சின பற்றியா பேச வந்தது? அங்கு என்ன புரொப்ளம்?"
"பாதைகளின் சீரின்மை காரணமாக பள்ளத்து வீடுகளில் இருக்கும் மக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருக்கிறது ஐயா! மழை காலங்களில் மண்சரிவு ஏற்பட்டு, பல சேதங்கள் ஏற்படுகின்றன. பாது காப்புக்காகப் போடுவதாகச் சொல்லியிருந்த மதில்களையும் இன்னும் செய்து தரவில்லை. அந்த வேலைகளுக்காக அரசாங்கம் குறிப்பிட்டதொரு பணத்தொகையை ஒதுக்கியிருப்பதாகவும் அறிகிறோம். அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை ஐயா! பலரிடம் கூறியும் இன்னும் எந்தத் திட்டமும் அமுலுக்கு வரல்லீங்க.. நீங்களாவது நமக்கு இந்த உதவியப் பண்ணிப்புடுங்க.. புள்ள குட்டிகளோட நீங்க எந்தக் கொறயுமில்லாம வாழனும்"

"ஓ..கே.. நான் பார்க்கிறன். கவலப்படாமப் போயிட்டு வாங்க.."
இந்தச் சம்பாஷனைக்குப் பிறகு சண்முகம் மிகுந்த சந்தோஷத்துடன் வீட்டுக்கு வந்தார். நடந்த அனைத்தையும் ஊரவர்களிடம் கூறிச் சந்தோஷப்பட்டார். தமக்கு விடிவு காலம் பிறக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, திரிந்தார். அவர் அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்டு, ஊரே சந்தோஷப்பட்டது.

சண்முகத்துக்கு இவ்வாறான பொது வேலைகள் செய்வதில் அக்கறை அதிகம். தனது குடும்பத்தைப் போலவே அனைவரையும் நேசிப்பார். அவரது மனைவியான வேதவல்லியும் அப்படித்தான். அவரது சுக- துக்கங்களிலும், ஆசாபாசங்களிலும் சமபங்கெடுத்துக் கொள்வாள். அவர்களின் இனிமையான இல்லற வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்க வந்து பிறந்தவன்தான் சுந்தர். சுந்தரின் மீது சண்முகத்துக்கு அலாதிப் பிரியம். அவனைத் தன் நெஞ்சோடு அணைத்தும், விளையாட்டுக் காட்டிக் கொண்டும் இருப்பார்.

பெரும்பாலான அப்பாக்களைப் போல் அல்லாமல், சுந்தரின் கழிவுக ளையும் சுத்தப்படுத்திக் கிட்டத் தட்ட ஒரு ராஜா போலவே சுந்தரை வளர்த்து வந்தார் சண்முகம். வேதவல்லிக்கும் சுந்தர் மீது பாசம் அதிகம் என்றாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சற்றுக் கண்டிப்புடன் நடந்து கொள்வாள். காரணம் கேட்டால்..

**"அது வந்துங்க.. ரொம்ப பாசமா வளத்துப்புட்டா.. அப்புறம் பொறுப் பில்லாமப் போயிருவான் பையன். கொஞ்சம் அடக்கித்தான் வளர்க்கனும். இல்லாட்டி நம்ம தலையிலேயே மொளகா அரச்சிப் புடுவானுங்க.."** வேதவல்லி சொன்ன தத்துவத்தைக் கேட்டு, ஆமோதித்துப் புன்ன கைத்தார் சண்முகம். ஆச்சியும் வேதவல்லியின் கருத்துக்களுக்குச் செவிசாய்த்தாள்.

கிராமசேவகரிடம் பேசிவிட்டு வந்த பிறகும் பல மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் எந்தப் பிரயோசனமும் நிகழாத காரணத்தால், நிலை மையை விசாரித்து வருவதற்காகத்தான் டவுனுக்குப் புறப்பட்டுச் சென்றார் சண்முகம். நாளிகை பல கடந்தும், அவர் இன்னும் வீட்டுக்கு வந்து சேரவில்லை. பதறிப்போன ஆச்சி பக்கத்து வீட்டு ராமசாமியை அழைத்து, விடயத்தைச் சொன்னாள். உடனே அனைவரும் உசாராகி, சுந்தரின் அப்பாவான சண்முகத்தைத் தேடி- னார்கள். எங்கு தேடியும் அவரைப் பற்றிய தகவல்கள் கிடைக்க வில்லை.

இருள் சூழ்ந்து விட்டது. சண்முகத்தைக் காணவில்லை. ராமசாமி அடிக்கடி பாதையைப் பார்த்தார். ஆச்சியும், வேதவல்லியும் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்கள். ராமசாமிக்கும் - அவனது மனை விக்கும் மிகுந்த யோசனையாகவே இருந்தது.

கொஞ்ச நேரத்தில் பாதையின் அந்தப் பக்கத்திலிருந்து ஒரு உருவம் மிக வேகமாக ஓடி வருவது விளங்கியது. ஆச்சிக்கும் விளங்கியிருக்க வேண்டும். கண்களை சுருக்கிக் கொண்டே மிகவும் கஷ்டப்பட்டு, லாம்பு வெளிச்சத்தில் உற்று உற்றுப் பார்த்தாள். ஓடி வந்தது சண்முகம் அல்ல, எனினும் வந்த சிறுவன் சொன்ன தகவல் சண்முகம் பற்றியது.

**"ஆச்சி ஒன் மவன் போன பஸ்சு எக்சிடன்ட் ஆயிடுச்சாம். டவுனாஸ்பத்திரியில் அவர சேர்த்திருக்காங்களாம்.."**

ஆச்சிக்கும், வேதவல்லிக்கும் எப்படி ஆறுதல் சொல்வதென்று ராமசாமிக்குத் தெரியவில்லை. பட்டப் பகலிலேயே அந்தப் பாதையில் போவது கஷ்டமான காரியம். இந்த இருட்டுக்குள் எப்படிப் போவது? அனைவரும் விடியும் வரை காத்திருந்தார்கள். மணித்தியாலங்கள் ஆமை வேகத்தில் நகர்ந்தன. எப்படியோ விடியற் காலையில் அனைவரும் மருத்துவமனைக்குச் சென்றார்கள். அங்கே சண்முகம் முனுகலோடு படுத்திருந்தார்.அவரது தலையில் பெரிய கட்டு போடப் பட்டிருந்தது. அவருக்கருகே அவரது மஞ்சள் நிறச் சட்டை இருந்தது. அந்தச் சட்டையில் இரத்தம் பட்டு, அந்தி நேர வானம் போலக் காட்சி யளித்தது. **"அய்யா"**- என்றபடி சிறுவன் சுந்தர் அவர் கால்களைப் பிடித்தவன் அதிர்ந்தான். அங்கே அவரது கால்கள் நீக்கப்பட்டிருந்தன. ஆச்சி தன் பொக்கை வாயைத் திறந்து, ஓவெனக் கதறியழ, வேத வல்லி மயங்கிக் கீழே விழுந்தாள்.

**"யனவா அரயெத்தட்ட... லெடாட கரதர கரன்னெத்துவ"("நோயாளிக்குக் கரைச்சல் கொடுக்காமல் போ, அந்தப் பக்கம்") "நர்ஸ்"**- திட்டிக் கொண்டிருந்தாள். அந்த "நர்ஸ்"- தன் கைகளில் வெள்ளை நிறக் கையுறை அணிந்திருந்தாள். அவள் சண்முகத்தின் தலையில் கட்டப் பட்டிருந்த கட்டை அவிழ்த்தாள். திரட்டு திரட்டாகப் படிந்திருந்த இரத்தம் அவளது கையுறையிலும் அப்பியது. அருவருப்பாகப் பார்த்த **"நர்ஸின்"**- பார்வை சுந்தரின் இதயத்தில் அனலாயிற்று. பாதைகளின் சீரின்மையால், ஏற்பட்ட இந்தப் பயங்கரமான விபத்தை எண்ண அவனுக்கு அதிகாரிகள் மீது ஆழ்ந்த வெறுப்பும், கோபமும் ஏற்பட்டது. சண்முகத்தின் கால்கள் அகற்றப்பட்டிருந்ததால், வேதவல்லி மிகவும் உடைந்து போயிருந்தாள். சில மாதங்கள் அந்த வீடே இழவு வீடு போல் காட்சியளித்தது. நாட்கள் நகர ஒரு நாள் காலை பதினொரு

மணியளவில் பலத்த பேய் மழை பெய்து கொண்டிருந்தது. சண்முகத்தின் குடிசை கப்பலாக மாறி, மழை நீரில் மிதந்து கொண்டிருந்தது. மழைக்கு முன் விறகு பொறுக்குவதற்காக மலைக்குச் சென்றிருந்த ஆச்சி, முனுசாமியின் வீட்டில் குளிரில் நடுங்கியவாறு, மழை விடும் வரை காத்திருந்தாள். பாடசாலைக்குச் சென்றிருந்த சுந்தரும் இன்னும் வீடு வந்திருக்கவில்லை.

அப்போது அவர்கள் யாருமே கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியாதவாறு, திமுதிமுவென இடம்பெயர்ந்து, வந்த மண் குவியல்கள் சண்முகத்தின் குடிசையைக் கொஞ்சம் கொஞ்சமாக மூடிக் கொண்டிருந்தன. மழை காரணமாக எவரும் வெளியில் வந்திருக் கவில்லை– என்பதால் இந்தக் கோரமான காட்சியை யாரும் கவனிக் கவில்லை. சோவெனப் பெய்த மழைச் சத்தத்தில் வேதவல்லியின் அபாயக்குரல் யார் காதிலும் கேட்டிருக்கவில்லை. காலில்லாத கணவனைக் காப்பாற்ற முடியாமலும், சண்முகத்தைத் தனியே விட்டு விட்டு, தான் மட்டும் தப்பிச் செல்ல முடியாமலும் வேதவல்லி தவித்தாள். கல்லானாலும் கணவன் அல்லவா? சந்தோஷமாக வாழ்ந்த அந்தக் குடிசையிலேயே அவளும் சண்முகத்துடன் மூச்சடங்கிப் போனாள்.

இந்த மழையின் தாக்குதலால் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக ஓடிக் கொண்டிருந்த சிறிய ஓடைகளும் மூடப்பட்டு விட்டன. அந்த லயத்தில் வாழ்ந்தவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை தாங்க முடியாததாய் இருந்தது. சண்முகத்தைப் போலவே சுந்தரும் பல அதிகாரிகளைச் சந்தித்துத் தண்ணீர் பிரச்சினையைப் பற்றிக் கூறி விட்டான். எல்லா விதமான பிரச்சினைகளும் அந்த லயத்தை மாறி, மாறி வதைத்துக் கொண்டிருந்தன. மூன்று நாட்களுக்கொரு தடவ என்ற தவணை முறையில் கடந்த ஆறேழு வருடங்களாக நீர்த் தாங்கிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. நீர்த் தாங்கிகளில் நீர் வராமல் இருக்கும் நாட்களில் மக்கள் படும் அவஸ்தையை ஆச்சியாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டு, பத்திரிகையில் மட்டும் தண்ணீர்ப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேட்டி கொடுத்துக் கொண்டிருந்த அந்த அதிகாரியைப் பார்த்து ஆச்சியின் வாய் **“கட்டையில் போவான்கள்.. கள்ளனுகள்!!!–”** எனக் கோபமாக முணு முணுத்தது.

-கவிதை-

# கொரோனா ஒழிப்பாய்!

-கவிஞர் மருதூர் ஜமால்தீன்-

கொரோனா வந்தது பார்-உலகில்
கொரோனா வந்தது பார்!

மெல்லவூர்ந்து மிகைத்தெங்கனுமே
மேவித் தரித்து மானுடவுயிரைக்
கொல்லும் கருவியென்றாய் மனிதனை
அல்லும் பகலும் துரத்தும் கொடுமை!

உழைத்து வாழ அழைப்புமில்லை
உழைப்பும் போதா களைத்து வாழ
பிழைக்க முடியா தடுப்போர் கூடி
பிணங்கும் வாழ்வில் முனங்கும் நிலையே!

படிப்புத் தொடரக் கல்வியில்லை
பாதையில் செல்லவுரிமையில்லை
துடிப்பாய்த் திரிந்த பிள்ளையெங்கும்
தூங்கிச் சோம்பி வீட்டில் முடங்கி!

வாழ்வு மடங்கி ஆற்றல் முடங்கி
வருந்திச் சுருங்கி கருத்தும் மயங்கி
வீழ்வோர் நினைத்து கவலை தோய்ந்து
வினையெம் தவறா எனவும் தெரியா!

தொடருமவலம் மனம் வீண் சபலம்
துன்பம் துயரம் வன்மையதிகம்
இடர்கள் கண்டு தடையால் நொந்து
இழப்பு பலவாய் தழும்பு நிலையாய்!

இனியும் தாங்கிட முடியாதிந்த
இகத்தின் தொற்று கொரோனாவொழித்து
நனியில் நிலவும் நீசமொழிந்து
நன்மை தருவாய் எங்களிறையே..!!!

-கட்டுரை-

# கொரோனா விருமுறை!

-து.சிந்துஜா-

"கொரோனா"- இன்று உலக மக்களால் அதிகளவில் உச்சரிக்கப்படுகின்ற வார்த்தையாக மாறி விட்டது. இந்த வைரஸைக் கண்டு பயப்படாதவர்கள் யாரும் இல்லை என்று கூடக் கூறலாம். மனிதர்களின் நிலை இவ்வாறிருக்க, இயற்கையையும் அவை சார்ந்த கால்நடைகளின் செயற்பாடுகளையும் நாம் அவதானித்தால், அவை மிகவும் சுதந்திரமாக தற்போதைய சூழ்நிலையில் உலாவுகின்றன.

ஊரே அமைதியாக இருக்கும் இக்காலகட்டத்தில் எம்மைச் சுற்றி மரங்களின் அசைவும், பறவைகளின் ஒலியும், கடல் அலைகளின் ஓசையும் மனிதன் சக மனிதனுடன் உரையாடும் சத்தமும், வீட்டிலுள்ள அனைவரும் தங்களுக்குள் பேசிச் சிரிக்கும் சத்தமும் புதுவித உணர்வை ஏற்படுத்துகிறது என்றால் அதை மறுப்பதற்கில்லை.

ஊரே ஊரடங்கில் அமைதியாயிருக்கும் போதும், இயற்கை ஒரு போதும், தனது செயற்பாட்டை நிறுத்தவில்லை. பணம்.. பணம்.. என்று பணத்தின் பின்னால் ஓடி, இறைவன் எமக்கு இலவசமாகக் கொடுத்த இயற்கையை இரசிக்க மறந்ததன் தண்டனையாகத் தான் இறைவன் கட்டாயத்தின் பேரில், எம்மை வீட்டிலிருக்க வைத்திருக்கிறார் போலும்.

சுதந்திரமாகச் சுற்றித் திரிய வேண்டிய பறவைகளைக் கூண்டில் அடைத்து வைத்து, வேடிக்கை பார்க்கும் மனிதர்களுக்கு தற்போது புரியும் ஒருவரின் இயல்புத் தன்மையை மாற்றினால் எப்படி இருக்குமென்று. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் வளியின் சுட்டி அதிகரித்துள்ளது. வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை, தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் மாசு– கழிவு நீர் போன்றன சுற்றாடலின் சுத்தத்தை எவ்வாறு

மனிதனை அச்சுறுத்தும் கொரோனா இயற்கையின் பக்கம் சாதகமாயிருக்கின்றது என்று கூடக் கூறலாம். மனித நடமாட்டம் இல்லாததால், கடற்கரை ஓரங்கள் குப்பை கூழங்களால் அழுக்காகா மல் இருக்கும். இவ்வாறு பல உதாரணங்களைக் கூறலாம். இயற் கையின் எழிலை, அதன் தன்மை மாறாமல், அப்படியே இரசிப்பதற்க ான ஒரு வாய்ப்பை இந்தக் கொரோனா ஏற்படுத்திக் கொடுத்திருக் கிறது. உலகத்தில் இன்று பல பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் **"கொரோனா"**- என்ற வைரஸ் ஏதோ ஒரு வகையில் மனிதர்களுக்கு ஒரு விடயத்தை உணர்த்தியிருக்கிறது - என்று தான் கூற வேண்டும்.

அது மாத்திரமின்றி, நேரத்தை எவ்வாறு பயனுள்ள விதத்தில் செலவழிக்க வேண்டும் என்பதையும், அனைவரும் கற்றுக் கொண்டுள்ளோம் என்றும் கூறலாம். பெண்களுக்கு வீட்டில் என்ன வேலை இருந்துவிடப் போகிறது என்ற எண்ணம் கொண்ட ஒரு சில ஆண்கள் இன்றும் நம்மத்தியில் இருக்கின்றனர். அப்படிப்பட் டவர்களுக்கு இந்தச் சமயத்தில் பெண்களுக்கு ஓய்வு என்பது மிகவும் அரிது என்பது புரியும். இவ்வாறு சின்னச் சின்ன விடயங்களைக் கூடக் கூறலாம். பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்க முடியாத தந்தையர்கள், உடன் பிறப்புக்களுடன் ஒன்றாக அமர்ந்து சிரித்துப் பேச முடியாமல், இருந்தவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். உறவினர்களைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொள்ளும் நாம் இன்று எப்போது அவர்களை மறுபடி காண்போம் என்ற ஓர் ஏக்கம் ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட்டுக் கொண் டேயிருக்கும்.

பலருக்குள் ஒளிந்திருந்த பல திறமைகளை இக்காலகட்டங்களில் சமூக வலைத்தளங்களில் எம்மால் காணக் கூடியதாகவிருக்கிறது. இத்தனை நாட்களாக எங்கே இருந்தது இந்தத் திறமைகள் எல்லாம். எல்லா வற்றுக்கும் சந்தர்ப்பம் அமைய வேண்டும். அந்த வகையில் பார்த் தால் இந்தக் கொரோனா விடுமுறை ஒரு பக்கம் கஷ்டம் என்றாலும், இன்னொரு பக்கம் நமது குடும்பத்துக்காகவும், நமக்கா கவும் நேரத்தைச் செலவழிக்கக் கிடைத்த சந்தர்ப்பமாக இருக்கட்டும்..! தீமையிலும் ஒரு நன்மை.

-கவிதை-

# கொரோனா வைரஸ்!

-கவிஞர் க.ரெட்ணையா,கன்னன்குடா-

கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ்
காற்றுடன் பரவி வந்து-உலகில்
எண்ணில்லா மனித உயிர்களைக் கொன்று திண்டு
ஏப்பமிட்டதும் ஏனோ இறைவா!
அன்னிய நாட்டுக்கு தொழிலுக்குச் சென்றோர்
அங்கிருந்து கொரோனாவைக் காவிக் கொண்டு
புண்ணிய பூமியாம் சிவபக்தன் இராவணன்
புகழுடன் ஆண்ட இலங்காபுரியில் இறக்கி விட்டனரே!


சத்தமில்லாமல் யுத்தமில்லாமல் மனிதர்க்கு
சாவைத் தந்திட்ட கொரோனா-உலகமகா
யுத்தம் நடந்தது போன்று உலக நாடுகளின்- மனித
உயிரைக் கொன்றதும் முறையோ?
விகாரி வருடம் முடியும் வேளை உலக மனிதர்க்கு
வியாதி தந்து இலட்சக்கணக்கான மனித உயிரை
சாகடித்த விகாரி ஆண்டே வேண்டாம்-நீ போ
சகலருக்கும் நல்வாழ்வு தர சர்வரி ஆண்டே வா!

கண்டதைக் கெட்டதை உண்டு
கவலையே இல்லாது சீனா
உண்டாக்கி விட்டது கொரோனா வைரஸ் தன்னை
உலகமே நடுங்குது உயிருக்காக இன்று!
மாண்டோர்கள் உறவை நினைந்து
மனம் கலங்கி அழுதென்ன இலாபம்
ஆண்டவன் தனைப் பிரார்த்திப்போம்!

-சிறுகதை-

# வரலாற்றுச் சுருக்கங்கள்!

-கே.ஆர்.டேவிட்-




நான் ஆசிரியராகிப் பத்து வருடங்கள். இந்தப் பத்து வருடங்களும் "வெளி மாவட்டச் சேவை"- என்ற சட்டத்தோடு "வாரோட்டம்"-நடாத்தி எப்படியோ சட்டத்தை வென்று, சொந்த ஊர் பாடசாலை யொன்றைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, இருந்து விட்டேன்.

இந்த வருடம்... எனது அரசியல் தீர்க்க தரிசனம் பிழைத்ததால், இம்முறை எனக்கு ஏற்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்ய முடியாமல் போய் விட்டது.

இம்முறை நடந்த பொதுத் தேர்தலில் நான் ஆதரவு காட்டிய வேட்பாளரால் தேசிய பேரவைக் கதிரையில் குந்த முடியாமற் போய் விட்டதால், அதன் பிரதிபலிப்பு..?

இடமாற்றப் பட்டியலில் எனது பெயர்தான் முதலாவது. அதிலும் கஷ்டப் பிரதேசமான மூதூரில் ஒரு பாடசாலை.

தேசிய பேரவைக் கதிரையில் குந்தியிருக்கும் எனது எதிரியின் கால்களைப் பிடிக்கக் கூடாது என்ற மன வைராக்கியத்தோடு, வெற்றிகரமாகத் தோல்வியை ஒப்புக் கொண்டு, மூதூர்ப் பாடசா லைக்கு வந்து விட்டேன்.

மார்கழி மாத விடுமுறையின் பின் இன்றுதான் பாடசாலைகள் ஆரம்பம்.
மூதூர்ப் பாடசாலை.
அதிபரின் காரியாலயத்தில் அமர்ந்திருக்கிறேன்.
இப்பாடசாலையில் படிப்பிக்கின்ற ஆசிரியர்களை அதிபர் எனக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

அதிபர்,
அவர் பெயர் கனகசிங்கம்.

இவரது பெயரை அடிக்கடி பத்திரிகையிலே பார்த்த நினைப்பு எனக்குண்டு. ஏனென்றால் இவர் ஒரு எழுத்தாளர்.

பொது நிறமானவர். ஓரளவு உடம்பானவர். சுருண்ட கேசம். கண்ணாடி நிலத்தில் விழுந்து பந்து துடிப்பதைப் போன்ற சுறுசுறுப்பு! சம்பிரதாய பூர்வமாகவும், மனிதாபிமானமாகவும் அதிபருக்கும் - எனக்கும் இடையில் சில சம்பாஷணை நடந்து முடிகிறது.

“மாஸ்டர், உங்களை ஐந்தாம் வகுப்புப் பொறுப்பாசிரியராகப் போட்டிருக்கிறேன். பிறகு பார்த்துச் செய்வம்..”– அதிபரின் வேண்டுகோள் கலந்த கட்டளையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

"ஏதாவது தேவையெண்டால் சொல்லுங்கோ.."- அதிபர் என்னிடம் கூறுகின்றார்.

"சேர்.."
"சொல்லுங்கோ.."

"நான் நாளைக்கு ஊருக்குப் போகலாமெண்டு நினைக்கிறேன்.."
"என்ன மாஸ்டர் இப்பதானே வந்த நீங்க.."

"உண்மைதான். என்ர புள்ளையளைப் பிரிஞ்சிருந்து எனக்குப் பழக்க மில்லை. அதால ஊருக்குப் போய்க் குடும்பத்தைக் கூட்டி வரப் போறன்".
"சரி.. போட்டு வாருங்கோ".
"சேர்.."

"சொல்லுங்கோ..?"

"இரண்டு மணிக்குத் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் இருக்கு. நான் இஞ்சையிருந்து பதினொரு மணிக்குப் புறப்பட்டால்-தான் அந்தப் பஸ்ஸிலை போகக் கூடியதாக இருக்கும்".

"சரி மாஸ்டர்.. நீங்கள் பதினொரு மணிக்குப் போங்கோ..". அதிபர் பெருமனதோடு எனது வேண்டுகோளை ஏற்று, அனுமதியளிக்கிறார்.

எனக்குப் பெரும் மனத்திருப்தி.
இப்போது ஒன்பது மணி. இன்னும் இரண்டு மணித்தியாலங்களைக் கடத்த வேண்டும். ஆனால் இன்னும் அதிபரின் காரியாலயத்தில் அமர்ந்திருப்பது முறையல்ல.

"சேர் நான் வகுப்புக்குப் போகட்டா.."
"நல்லது, போங்கோ"

நான் ஐந்தாம் வகுப்பைத் தேடி நடக்கிறேன். ஐந்தாம் வகுப்பு-
"வணக்கம் சேர்"

"வணக்கம்"– மாணவர்களும் அமர்கின்றனர். நானும் அமர்கிறேன். கிட்டத்தட்ட முப்பது மாணவர்களிருக்கும். புதிதாக வந்த என்னைச் சகலரும் ஆவலோடு பார்க்கின்றனர்.

"நாளைய சமூதாயத்தை நிருணயிப்பவர்கள்"– பத்து வருடங்களாக ஒரே பாடசாலையில் இருந்து பார்த்துப் புளித்துப் போன முகங்களை விட்டு, புதிய முகங்களைப் பார்த்ததாலோ என்னவோ, என்னை யறியாமல் இப்படியொரு எண்ணம் எனது மனதிலே தோன்றி மறைகிறது.

"என்னுடைய பெயர் விபுணசேகரம். இனிமேல் நான்தான் உங்களுக்கு வகுப்பு மாஸ்டர்". நான் என்னைப் பற்றிய அறிமுகத்தைச் சுருக்கமாக முடிக்கிறேன்.

"சரி நான் என்னுடைய பெயரைச் சொல்லிட்டேன். இனி, நீங்கள் ஒவ் வொருவராய் உங்கட பெயரைச் சொல்லுங்கோ".

"சிவமுரளிதரன், தெய்வேந்திரன், கபிலநாதன், செந்தூரன், சங்கரி, மிதுலா.."– இப்படியே ஆண்களும், பெண்களும் தங்கள் பெயர் களைக் கூறுகின்றனர்.

"இந்த வகுப்பு மொனிற்றர் ஆர்?"– நான் கேட்கிறேன்.
"சேர், இன்னும் மொனிற்றரைத் தெரியவில்லை"– அவள் வாணிஸ்ரீ கூறுகின்றாள்.

"அப்ப ஒரு மொனிற்றரைத் தெரிவு செய்வம்"
"சரியுங்க சேர். மொனிற்றரைத் தெரிவு செய்வம்"– மாணவர்களும் தயாராகின்றனர்.

"இந்த வகுப்பில் யார் கெட்டிக்காரன்?"
"கபிலநாதன் சேர்"

"கபிலநாதன் எழும்புங்கோ.."– நான் கபிலநாதனைத் தேடுகிறேன். கபிலநாதன் எழுந்து நிற்கிறான்.

கறுத்த மெலிந்த, கட்டைத் தோற்றம். சொந்த நிறத்தை இழந்து வெளிறிய ஒரு டெர்லின்சேட் அதிலும் பல பொத்தான்கள். ஒரு சிறிய களிசான். சிறுபிள்ளைகள் போல் இன்னமும் முன்னோக்கி வளர்ந்திருக்கும் தலைமயிர்.

சோக்குக் கட்டியில் தொட்டந் தொட்டமாக கறுப்பு மை ஊறியிருப்பது போல, அவனது தோற்றத்தில் தொட்டந் தொட்டமாக வறுமைப் பிரதிபலிப்புக்கள் தெரிகின்றன.

எனது மனம் அவனுக்காகப் பரிதாபப்படுகிறது.
“கபிலநாதனை மொனிற்றராக்குவம்”
“ஓம் சேர்”– அதிகமானவர்கள் எனது பிரேரணையை ஆமோதிக்கின்றனர்.

இடையில்,
புதியதொரு பிரேரணை வெடிக்கிறது.
“சேர் செந்தூரனை மொனிற்றராக்குவம்”– அவன் விநாயகமூர்த்தி கூறுகிறான்.

சின்னஞ் சிறுசுகளிடம் ஏற்பட்டுள்ள போட்டி, நான் மெதுவாக இருக்கிறேன்.
“சேர்.. உவன் விநாயகமூர்த்தி, செந்தூரனிட்ட வாங்கித் தின்னுறவன். ஆதாலதான் உவன் செந்தூரனைத் தெரிவு செய்யிறான்”– வாணிஶ்ரீ கூறுகிறாள்.

“நக்குண்டார் நாவிழந்தார்”.– அந்த உணர்வா? அந்தப் பெரிய உணர்வு இந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு வருமா?
எனக்குள் ஓர் உணர்வுக் குமிழ் வெடிக்கிறது.

நாக்கு நனைத்ததற்காக நாக்குப் புரட்டுகின்ற தப்பிலித்தனம். விநாயகமூர்த்திக்கு ஏற்படுமா?

எனது மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.
“சேர்.. நான் மொனிற்றராய் இருக்கிறேன்”. அந்தச் செந்தூரன் எழுந்து நின்றான்.

புத்தம் புதிய சோக்குக் கட்டியின் அழகு. மதாளிப்பு, மொணிற்றர், ஒரு பதவி.

இவன் செந்தூரன். இவனுக்குப் பதவி ஆசையா?
உலகம் புரியாத வயது. அப்படிப்பட்டவனுடைய செயலுக்கு நான் அர்த்தம் கற்பிக்கலாமா? அது சிறு பிள்ளைத்தனம்.

நிச்சயமாகப் பதவி ஆசையல்ல.
**"அப்ப ஆரை மொணிற்றராக்குவம்".** நான் பிரச்சினையைப் பொதுவாக வைக்கிறேன்.
**"சேர்.. கபிலநாதன்தான் கெட்டிக்காரன். அவன்தான் மொணிற்றர்".**

**"சேர்.. செந்தூரன் வெறும் மொக்கன். அவனை மொணிற்றராக்க வேண்டாம்".**

வகுப்பில் பெரும் கலவரம். பெரும்பான்மையான மாணவர்கள் கபிலநாதனை ஆதரிக்கின்றனர்.

வகுப்பிலேற்பட்ட போட்டி மனப்பான்மையை, ஆசிரியர் அதிகாரத் தைப் பாவித்து, அடக்கிவிட நான் விரும்பவில்லை. அப்படியென்றால் முடிவு? யார் மொணிற்றர்..?

ஒரு தேர்தல்.
மொணிற்றர் பதவிக்கான தேர்தல்!

இவர்கள் இந்த மாணவர்கள் நாளைய தலைவர்கள். நாளைய சமூதாயத்தில் இவர்கள் பங்குபற்றப் போகும் நிஜமான தேர்தலுக்கு இன்று ஒத்திகை நடாத்தப் போகிறேனா..? எனது மனம் கூசுகின் றது.

ஏன்?

தேர்தல் சாக்கடையை மிடறு முறித்துப் பல தடவை குடித்த அனு பவம் எனக்குண்டு!

இந்தச் சமூதாயத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட உணர்வு. உலகம் புரியாத இந்தச் சிறுசுகளின் செயல்களுக்கு மிகப் பெரும் அர்த்தங்களைக் கற்பித்து, நானே எனக்குள் அவதிப்படுகிறேன்.

**"சரி போட்டி வைப்பம்"**– நான் கூறுகின்றேன்.
**"என்ன போட்டி சேர்..?"**

**"முதலிலை கபிலநாதனை விரும்புறவை உங்கட வலது கையை உயர்த்துங்கோ.. ஆருக்குக் கூடவோ அவர்தான் மொனிற்றர்".**
**"சரி.. சேர்"**

**"கபிலநாதனை மொனிற்றராக்க விரும்புறவை உங்கட வலது கையை உயர்த்துங்கோ.."**– நான் கூறுகின்றேன்.

தொண்ணூறு சத வீதமான கைகள் உயருகின்றன. கபிலநாதன் மொனிற்றர் என்பதை எனது மனம் தீர்மானித்துக் கொள்கிறது.
**"சேர்.. உங்களைப் பிறின்சிப்பல் வரட்டாம்"**– பெரிய வகுப்பு மாணவன் ஒருவன் வந்து கூறி விட்டுப் போகின்றான்.

போட்டியை நிறுத்தி விட்டு, நான் அதிபரின் காரியாலயத்தை நோக்கி விரைகின்றேன்.

அதிபரோடு கதைத்த நான் பதினொரு மணிக்குப் புறப்பட்டு, விடு கிறேன். திரும்பவும் வகுப்புக்குப் போக முடியவில்லை.

ஒரு கிழமை லீவின் பின் பாடசாலைக்குத் திரும்பவும் வந்து, ஐந்தாம் வகுப்பிற்கு வருகிறேன்.

**"சேர் மொனிற்றர் தெரிவம்"**– நான் மறந்து போய் விட்டேன். மாணவர்கள் மறக்கவில்லை. ஒரு கிழமைக்கு முன் இந்த வகுப்பில் நடாத்தப்பட்ட மொணிற்றர் தெரிவு சம்பந்தமான நிகழ்ச்சிகளை எனக்குள் இரை மீட்டுக் கொள்கிறேன்.

கபிலநாதன்.. செந்தூரன்..
கபிலநாதனுக்காகத் தொண்ணூறு சதவீதமான கரங்கள். கபிலநாதன் தான் மொணிற்றர்.

"கபிலநாதனை மொணிற்றராக்க விரும்புறவை வலது கையை உயர்த்துங்கோ"– நான் முதலிலிருந்து போட்டியை ஆரம்பிக்கிறேன். என்னையே என்னால் நம்ப முடியவில்லை!

இப்படியும் நடக்குமா?
என்ன கொடுமை!
கபிலநாதனுக்காக ஒரு கைகூட உயர்த்தப்படவில்லை.

"சரி, செந்தூரனை மொணிற்றராக்க விரும்புறவை உங்கட வலது கையை உயர்த்துங்கோ"– என்னை நானே சமாளித்துக் கொண்டு, போட்டியைத் தொடர்கிறேன்.

போட்டியில் வாக்காளர்களாக நின்றவர்கள் செந்தூரனை ஆதரித்துத் தங்கள் கைகளை உயர்த்துகின்றனர்.

கபிலநாதன் தலை குனிந்து நிற்கிறான்.
செந்தூரன் தலை நிமிர்ந்து நிற்கிறான்.

இந்த மாற்றத்துக்குரிய காரணம்..? சென்ற ஒரு கிழமைக்குள் நடந்ததென்ன..?

என்னையே புரிந்து கொள்ள முடியவில்லை!
கபிலநாதன் எப்படித் தகுதியை இழந்தான்?

செந்தூரன் எப்படித் தகுதியைப் பெற்றான்?
புரியாத புதிர்!

போட்டி முடிவுப்படி செந்தூரனை மொணிற்றராக்குகின்றேன்.
எவருக்குமே கையை உயர்த்தாமல் இருந்த ஒரேயொரு மாணவன்..

அவன் பெயர் பவதாரணன். அவன்தான் எனது புதிரை விரிய வைக்கும் கருவியென்பதை நான் உணர்ந்து கொள்கிறேன்.
அவனை விசாரிக்க நேரத்தை எதிர்பார்க்கிறேன். பாடங்கள் நடக்கின்றன. இடைவேளை வருகின்றது. இதுதான் சரியான நேரம். நான் பவதாரணனைத் தனிமையில் அழைக்கிறேன்.
"பவன்"

"சேர்"
"நீங்க ஏன் ஒருத்தருக்கும் கையை உயத்தல்ல"
"எனக்கு விருப்பமில்லை சேர்"
"ஏன்"

"பொய் சொன்னால், களவு செய்தால் கடவுள் புழுக் கிடங்கிலை போடுவாரெண்டு லில்லி ரீச்சர் சொன்னவ".

"இதிலை என்ன களவு, பொய்"

"உண்மையில் கபிலநாதன் தானே சேர் கெட்டிக்காரன்".

"ஓம்.." "பிறகேன் சேர் செந்தூரனுக்காக எல்லாரும் கை உயர்த்தினவை?" "ஏன்..?"

"போன கிழமை முழுக்க செந்தூரன் எல்லாருக்கும் ஐஸ்பழமும், கச்சானும், ரொபியும் வாங்கிக் குடுத்தவன் சேர்"

"ஏன்?"
"தனக்குக் கையை உயர்த்தச் சொல்லி, அதுதான் சேர். எல்லாரும் அவனிட்டை வாங்கித் திண்டு போட்டு, அவனுக்காகக் கையை உயர்த்தினவை. அது பொய்தானே சேர்..?"

தேர்தல் தர்மம். அதைத்தான் பவன் என்னிடம் கேட்கிறான். பவன் புரிந்து கொண்டது தேர்தல் தர்மம் என்றால், செந்தூரன் புரிந்து கொண்டது..? தேர்தல் தந்திரமா..?

பவனுக்குத் தர்மத்தைக் கற்பித்தது லில்லி ரீச்சர். செந்தூரனுக்குத் தர்மத்தைக் கற்பித்தது..?..? மண்வாசனையா? இன்று ஐஸ்பழம்.. கச்சான்.. ரொபி.. மொணிற்றர் பதவிக்காக..?

நாளை..?
சாராயம்,.. இறைச்சி.. பணம்...!..?
இந்த மாணவர்கள்.

நாளை விரியப் போகும் சமூதாயச் சுருக்கங்கள்!
நாளைய சமூதாயத்தை நான் இன்றே இங்கே காண்கிறேன்!

**மாபெரும் பரிசு மழை கூப்பன் இல – 09**

முழுப்பெயர்:-.......................................................

முகவரி:-.......................................................

.......................................................

தொலைபேசி இலக்கம்:-.......................................................

இவ்விதம் 38 ஆவது இதழிலிருந்து 49 ஆவது இதழ் வரை வெளியாகும் கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள். 50 இதழ் வெளியீட்டு விழாவில் மாபெரும் பரிசிலை வென்றிடுங்கள்.



**நகைச் சுவைத் 'தென்றல்"**

**"ஏற்கிறதா
இல்லையா எண்டு
முடிவெடுக்கவே
இத்தனை
நாளெண்டா
அதை
ஏற்றால் தீர்ப்பு வர
எத்தனை
வருசமாகப்
போகுமோ..?"**

-கவிதை-

# கொரோனா வந்ததால்..!

-கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்-

கட்டியணைத்து
காதல் செய்த மனையாள்
எட்ட நின்று ஏனோ தானோவென்று
எடுத்தெறிந்து பேசுகிறாள்!
ஒட்டி உறவாடி
உள்ளம் மகிழ்வித்தவள்
தட்டி விடுகிறாள் கையை
தள்ளிப் போவென்று!
கேட்காமலேயே
அரவணைத்து அன்பை
அள்ளிக் கொடுத்தவள்
கேட்டும் தர மறுக்கிறாள்!
கையைக் கழுவு என்கிறாள்
முகத்தை மூடி
எட்ட நின்று
பேசு என்கிறாள்..!
தட்டிக் களித்தலும்
தூரம் பிரித்துப் பார்த்தலும்
தரம் கெட்ட கொரோனாவால்
தலை தூக்கி நிற்கிறது!
கைகொடுக்கும் நண்பனும்
கைதர மறுக்கிறான்
கதைக்காமல்
சடுதியாய்ப் போகிறான்!

-கட்டுரை-

# பெரியகுளம் வில்கம் விகாரை இந்து பௌத்த சமரசத்தின் தொன்மம்!

-திருமலை நவம்-

கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்திலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் வளம் நிறைந்த பெரியகுளப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் விகாரை வில்கம் விகாரை. இது தற்பொழுது இப்பெயரில் அழைக்கப்பட்டாலும், சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றி, நிர்வாகப்படுத்திய காலத்தில், இராஜராஜசோழன் (கி.பி.985- 1044 வரை), இராஜேந்திர சோழன் (1012- 1044 வரை) இது இராஜராஜ பெரும் பள்ளியென்றே அழைக்கப்பட்டு வந்தது. திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் அல்லது ஹொரப்பத் தானை செல்லும் நெடுஞ்சாலையில் கிளைப்பாதை வழியாக சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்விகாரை கன்னியா வெந்நீரூற்றுச் சந்தியைக் கடந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் இவ்விகாரை சந்தி வரும். அதிலிருந்து கிடைப்பாதை வழியாகச் செல்ல வேண்டும்.

சோழச் சக்கரவர்த்தியான ராஜராஜசோழன் என்பவன் (கி.பி 985-1044) பெரியகுளம் எனும் இடத்தில் பௌத்த பள்ளியொன்றினைப் புனரமைப்புச் செய்து, ராஜராஜப் பெரும் பள்ளியெனப் பெயரிட்டிருந் தான் என்றும், இப்பள்ளிக்கு நாதனார் கோவில் என்றும், வில்கம் விகாரையென்றும் நாமங்கள் இருந்ததென இங்கு கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பௌத்த ஆலயத்தைத் தமிழர், மற்றும் சிங்களப் பௌத்தர்கள் மட்டுமன்றி, இந்துக்களும் ஆதரித்து வந்தனர் என்பதை மேற்படி மூன்று பெயர்களும் உணர்த்துகின்றன. (ஆதாரம்- ஜி.தனபாக்கியம் எழுதிய **"இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திராவிடக் கலாசாரமும்"**)

திருகோணமலையில் கண்டறியப்பட்ட சாசனாங்களில் மயிலங்குளச் சாசனம் திரியாய்ப் பிரதேசச் செய்திகளையும், வேலைக்காரப்

படையினது செயற்பாடுகளையும் தெரிவிக்கின்றன. இச்சாசனம் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட போதும், கிரந்த எழுத்துக்களையும் கொண்டதாகக் காணப்படுகிறது. ஜயபாகு என்பவனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1126) இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

இச்சாசனப் பின்னணியில் மகாசேனன் மன்னன் காலத்தில் கோணேசர் ஆலயம் ஆழிக்கப்பட்டு, பௌத்த பள்ளி அமைக்கப்பட்டதை **"மஹாவம்சம்"**- கூறுகிறது. எனவே மகாசேனன் காலத்தில் கிழக்கில் பௌத்த பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகையில் வில்ஹம் விகாரை சோழர் காலத்தில் **"ராஜராஜ பெரும்பள்ளி"**- என்று அழைக்கப்பட்டது.

சோழர்கள் இலங்கையில் பௌத்த பள்ளிகளை அழித்ததாகச் **"சூளவம்சம்"**- கூறுகிறது. திருமலை மாவட்டத்தில் கன்னியாவுக்கு வடக்கே சுமார் ஏழு கிலோமீற்றர் தூரத்திலுள்ள வில்கம் விகாரையை சோழர்கள் பாதுகாத்து, ஆதரவளித்ததாக **"வில்கம் விகாரைச் சாசனம்"**- கூறுகிறது. சோழர் படையெடுப்பு இலங்கையை நோக்கி நிகழ்ந்த பத்தாம் நூற்றாண்டு காலத்துக்கு முன்பே வில்கம் விகாரை இருந்திருக்கிறது. சோழரது ஆட்சியின் கீழ் திருகோணமலைப் பிரதேசம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி விகாரை **"ராஜராஜப் பெரும்பள்ளி"**- யென பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் விகாரையின் தோற்றம் குறித்து தெளிவான விளக்கமில்லை.

திருமலையில் கிடைக்கப் பெற்ற அதிகமான அறக்கொடை சாசனங்கள் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்த தமிழ் பௌத்தர்களினால் **"வில்கம் விகாரை"**- உருவாக்கப்பட்டிருக்கக் கூடும் என நம்ப இடமுண்டு.

தமிழ் பௌத்தர்களால் இவ்விகாரை நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்ததன் காரணமாக சோழர்கள் இவ்விகாரையை அழிக்காமல் விட்டிருந்தனர். இங்கு கிடைக்கப் பெற்ற சாசனங்களின் மூலம் ராஜராஜசோழன் 84 பசுக்களை இவ்விகாரைக்குத் தானம் பண்ணியதாக

அறிய முடிகிறது. இப்பசுக்களிலிருந்து பெறப்படும் நெய் விகாரையின் விளக்குகள் எரியப் பயன்படுத்தப்பட்டன.

வில்கம் விகாரையில் 1929 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்ட பொருளான பித்தளை விளக்கில் பொறிக் கப்பட்டிருக்கும் அடையாளத்தின்படி இப்புனித விளக்கு "ஏரா நாடான் யாக்கரன்"– என்பவனால் அன்பளிப்புச் செய்யப்பட்டதென அறியக் கூடியதாகவுள்ளது. தமிழ் எழுத்துக்களால் இவ்விபரம் பொறிக் கப்பட்டிருக்கிறது.

கோவில் வளவுக்குள் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் சோழ நாட்டைச் சேர்ந்த "யக்கன்"– என்பவ னால் வழங்கப்பட்ட விளக் கொன்று பற்றிக் குறிப்பிடுகிறது. இதற்குப் புறம்பாக இன்னொரு கல்வெட்டில் கஜவாகு கோடியாரின் சீடனாகிய "அமுதன் சாத்தன்"– வழங்கிய விளக்குப் பற்றி குறிப்பிடுகிறது. (ஆதாரம் - ஜி.தனபாக் கியம் எழுதிய "தொல்லியல் ஆய்வுகளும், திராவிடக் கலாசாரமும்") இத்தகைய வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு நோக்கும் போது, வில்கம் விகாரைக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்கும் இடையில் எவ்வித வரலாற்றுத் தொடர்புகளும் இருந்ததாகக் காட்டப்பட வில்லை. அவ்வாறு இருக்கும் போது, கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகிலுள்ள பூர்வீகப் பிள்ளையார் ஆலயம் இருந்த மேடானது அனுராதபுரத்துடன் தொடர்புபட்டது, வில்கம் விகாரையின் ஆதிக் கத்தின் கீழ் இருந்தது - எனக் கூறுவதில் எவ்வித வரலாற்று உண்மைகளும் இருக்க முடியாது.

வில்கம் விகாரையின் தோற்றம் பற்றி அம்பிட்டிய சீவவன்ச திஸ்ச தேரர் பின்வரும் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

"WELGAM RAJAMAHA VIHARA POSSESSES MORE THAN TWO THOUSANDS YEARS OLD HISTRY IT SAYS IN SOME IMPORT ANT HISTORICAL, INSCRIPTIONS THAT THE WELGAM RAJA MAHA VIHARA HAD ITS ORIGIN WITH KING DEVANAMBIYATIS SA PLANTING ABODI PLANT IN ITS PREMISES"
இக்குறிப்பிலிருந்தோ அல்லது இவ்விகாரை பற்றிய ஏனைய

குறிப்பிலிருந்தோ, இவ்விகாரையுடன் கன்னியா வெந்நீரூற்று தொடர்புபடுத்தப்படவில்லை.

## சோழர்கால நிர்வாகம்

சோழர் காலத்துடன் தொடர்புபடுத்தி பேசப்படும் வில்கம் விகாரை தொடர்பான வரலாற்று ஆதாரங்கள் என்ற வகையில் சோழர் ஆட்சிக்கால நிர்வாகம் திருகோணமலைப் பிராந்தியத்தில் நடந்து கொண்டிருந்த போது, ராஜராஜசோழன் (கி.பி.985- 1014), அவன் மகன் ராஜேந்திரசோழன் (கி.பி.1012- 1044) சோழசாம்ராட்ஜம் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு மண்டலமும் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வளப் பிரிவில் நான்கு சோழவள நாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. நாலாவதான ராஜேந்திர சிங்கவளநாடு வில்கம் விகாரையென அழைக்கப்பட்டுள்ளது.

**"இவ்வரலாற்று மையமானது தனித்துப் பௌத்தமதத்துடன் மட்டும் தொடர்புபட்டதாக அமையாது. தமிழர்களோடு தொடர்புபட்டதாக அமைந்துள்ளமையை இலங்கையின் வரலாற்றில் இன்னொரு பக்கத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதெனலாம்".**

(ஆதாரம்:- யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்தினி அருளானந்தம் எழுதிய **"இலங்கைத் தமிழ் பௌத்தத்தின் அடையாளம் இராஜராஜப் பெரும் பள்ளி"**)

ராஜராஜப் பெரும்பள்ளியென அழைக்கப்பட்டு வந்த வில்கம் விகாரைப் பகுதி தற்பொழுது கட்டுக்குளம் பற்று என அழைக்கப்படும் பிரதேசம் திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச செய லாளர் பிரிவுக்குள்ளும், உள்ளூராட்சி என்ற வகையில் உப்புவெளிப் பிரதேச சபைக்குள்ளும் உள்ளடங்கிக் காணப்படுகிறது.

கன்னியாப் பிரதேசம் மாத்திரமல்ல, பெரியகுளம் வில்கம் விகாரைப் பிரதேசத்திலும் பாரம்பரியமாகவே தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த

பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டு வந்துள்ளது.

**"கி.பி. 11, 13 ஆம் நூற்றாண்டுகளில் நிர்வாகக் கட்டமைப்பினைக் கொண்ட தமிழ் பௌத்த மையமாக இராஜராஜப் பெரும்பள்ளி செழிப்புற்றிருந்ததெனலாம். அதேவேளை இக்காலகட்டத்தில் தமிழர்கள் அப்பிராந்தியத்தில் செறிந்து வாழ்ந்தனர் எனவும் கூறலாம்".**

(ஆதாரம்:- யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்தினி அருளானந்தம் எழுதிய **"இலங்கைத் தமிழ் பௌத்தத்தின் அடையாளம் இராஜராஜப் பெரும் பள்ளி")**

இவ்வரலாற்றுப் பின்னணியில் நோக்கும் போது, கன்னியா மற்றும் வில்கம் விகாரைப் பிரதேசங்கள் தமிழர்களின் தொன்மை சார்ந்த இடங்களாக இருந்து வந்துள்ளமை ஒருபுறமிருக்க, கன்னியா வெந் நீரூற்றுக்கும் - வில்கம் விகாரைக்கும் எவ்வித தொடர்பும் முடிச்சுப் போட்டுக் காட்டப்படவில்லையென்பதும் தெரிய வருகிறது.

11, 13 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலிருந்து தமிழ்ப் பௌத்தர் களால் பேணப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்டு வந்த இப்பள்ளி தொடர்பில் அண்மைக்கால சுற்றுலா விளம்பரமொன்று பின்வ ருமாறு கூறுகிறது. "WELGAM VIHARA NATANA KOVIL, SRILANKA'S ONLY TAMIL VIHARA BUDDITIST SHIRINE VELGAM VIHARA (ALSO) CALLED NATANA KOVIL BY HINDU WORSHIPPERS IS 15KM NORTH OF TRINCO AN A DATES FROM THE 2ND CENTURY AD"

சுதந்திரத்துக்கு முன்னைய காலப்பகுதியில் வில்கம் விகாரைப் பிரதேசம் பிரித்தானியத் தளபதியின் ஆட்சிக்குட்பட்டதாக அமைந்தி ருந்த காரணத்தாலும், குறிப்பாகக் கன்னியாக் கிராமம், வெல்வேரிக் கிராமம் ஆகிய பிரதேசங்களில் புகழ் பெற்ற கிறிஸ்தவ தேவால யங்கள் காணப்பட்டதாலும் ஆங்கிலேயர் இப்பிரதேசத்தை மிகக் கவனமாகப் பராமரித்து வந்துள்ளனர். அவ்வாறு இருந்த போதிலும் வில்கம் விகாரை என்னும் பள்ளி பற்றியோ, விகாரை பற்றியோ

ஆங்கிலேயர் அதிக கவனம் கொண்டதாக வரலாற்றுக் குறிப்புக்க-ளில் தெரியப்படுத்தப்படவில்லை.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல், முதலாம் இராஜராஜனுடைய ஆட்சியிலே சோழர் ஈழத்தினைக் கைப்பற்றி, ஏறக்குறைய 80 ஆண்டுகள் வரை இதனை நம் பேரரசுடன் இணைந்து ஆட்சி செய்துள்ளனர். சோழரின் ஆட்சிக் காலப்பகுதியில் வரையப்பட்ட 30 க்கும் மேலான கல்வெட்டுக்கள் கண்டெடுக் கப்பட்டுள்ளன.

முதலாம் இராஜராஜனுடைய மெயக் கீர்த்தியைக் கொண்ட கல்வெட்டு ஒன்று பதவியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருக்கோணேஸ்வரத்துக்கு அண்மையில் கடலின் அடிவாரத்திலி ருந்து சாசனத் துண்டொன்று மீட்கப்பட்டுள்ளது. பெரியகுளம் என்னும் இடத்தில் **“நாதனார் கோவில்”** என வழங்கும் **“இராஜராஜப் பெரும்பள்ளி”**– என்னும் விகாரையின் அழிபாடுகளிடையே ஏழு கல் வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனை மூன்று ஆவணங்களிலே அவனுடைய மெய்க்கீர்த்தி இடம்பெறுகிறது - என வரலாற்றுத் துறை பேராசிரியர் சி.பத்மநாதன் கூறியுள்ளார். (ஆதாரம்– **“ஈழத்து இலக்கியமும், வரலாறும்”**)

இவ்வாறு பார்க்கும் போது, சோழர் காலத்து ஆட்சிச் செல்வாக்குக்கு உட்பட்டதாகக் கூறப்படும் வில்கம் விகாரை பௌத்தத் தமிழ்த் துறவிகளின் சின்னமாக விளங்கியுள்ளது - என்பது உறுதிப்படுத் தப்படுகிறது.

80 ஆண்டுகளுக்கு மேல் இலங்கை சோழர் ஆட்சியின் கீழ் இருந்தது மட்டுமன்றி, அதன் கனதியான தாக்கமாக அல்லது மாற்றமாக இலங்கை மதத் துறையிலும், பண்பாடு– இலக்கியத்துறை மற்றும் மரபு தொன்மைசார் துறைகளிலும், திராவிடக் கட்டிடக் கலையும், தமிழ்மொழியும் தாக்கம் செலுத்தி, மிகப் பலமான வளர்ச்சி காணப் பெற்றுள்ளதாக கிங்ஸிலி டி சில்வாவை உதார ணம் காட்டி, சாந்தினி அருளானந்தம் தனது கட்டுரையில் குறிப் பிட்டுள்ளார்.

சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளமாகவே இராஜராஜப் பெரும் பள்ளியென அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் குறிப்பாக 1960 ற்குப் பின்னர் வில்கம் விகாரையென்று அழைக்கப்படும் விகாரை தமிழ் பௌத்தர்களின் முன்னீடு ஆகக் காணப்படுவதற்கு இன்னுமொரு உதாரணத்தையும் ஆதாரமாகக் காட்ட முடியும்.

சோழர் ஆட்சிக்குப் பின்னும் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தனர் என்பதனை பொலநறுவையில் கிடைக்கப் பெற்ற தமிழ்க் கல்வெட்டுக்கள் சான்று பகருகின்றன. இங்கு கிடைத்த தமிழ்க் கல்வெட்டுக்களிலொன்று கஜபாகு என்பவனின் பதினைந்தாவது ஆட்சி ஆண்டிலும், ஜயபாகு என்பவனின் 38 ஆவது ஆட்சி ஆண்டிலும், கி.பி.1157 இல் பொறிக்கப்பட்டதாகும். இதன்படி இலங்கையில் தமிழர்கள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை பௌத்த மதத்தைப் பின்பற்றியிருந்தனர்– என்பது தெளிவாகிறது.

இந்நாட்டிலேதான் சோழநாட்டுத் தமிழ்த் தேரரான புத்தம்பிய இலங்கையில் பௌத்த சமய நூல்களைப் பயின்றான் என்றும், இரண்டாம் பராக்கிரமபாகு (கி.பி 1236- 1271) சோழ நாட்டுத் தமிழ்ப் பிக்குகளை இலங்கைக்கு வரவழைத்து, பௌத்த மாநாடுகளைக் கூட்டி, இலங்கையில் தளர்ந்து கொண்டிருந்த பௌத்த சங்கத்தைப் புனரமைப்புச் செய்ததும், இக்காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த தமிழ்ப் பௌத்தர்கள் அரும்பணியாற்றினார்கள் என்றும், இலங்கைப் பௌத்த மத வரலாற்றில் பௌத்த மதம் அழியக் கூடிய அவல நிலையில் அதனைக் கட்டிக் காத்தவர்கள் சோழநாட்டுப் பௌத்தர்கள் என்றும் கூறப்படும் செய்தி ஊர்ஜிதமானது.

ஈழத்து சோழர் ஆட்சி வீழ்ச்சியின் பின்பு உண்டாக்கப்பட்ட சிங்களத் தலைநகர ஆட்சியாளர்களாக சிங்கள மன்னர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி செய்த போதும், வில்கம் விகாரையானது இச் சிங்கள மன்னர் காலத்தில் முக்கியத்துவம் கொண்டதாகக் குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை.

திருகோணமலையைப் போர்த்துக்கீசர் (1505), ஒல்லாந்தர் (1639), ஆங்கிலேயர் (1782) கைப்பற்றி, ஆண்ட காலத்திலும் சரி, அல்லது போத்துக்கீசர் (1624) கோணேசர் ஆலயத்தை நிர்மூலமாக்கிக் கோட்டையை நிர்வகித்த போதும் சரி, வில்கம் விகாரை கவனத்தில் கொள்ளப்பட்ட ஒரு பிரதேசமாகவோ அல்லது பள்ளியாகவோ கருதப்படாமையினாலேயே அவர்கள் கவனத்துக்கு உள்ளாக்கப் படாத விகாரையாகவே அது இருந்து வந்துள்ளது.

சோழ மன்னர்களால் புனரமைக்கப்பட்டதாகக் கருதப்படும் இராஜராஜப் பெரும்பள்ளியானது தமிழ் மக்கள் பலர் பௌத்தர்களாக இருந்தமைக்கான தொன்மை சார்ந்த சான்றாகக் காணப்படுகின்ற ஒரு வரலாற்று மையம் என்பதுடன், தமிழர்கள் வாழ்ந்தமை, தானமளித்தமை, புனரமைத்தமை என்பதை இங்கு கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இங்கு கண்டு எடுக்கப்பட்ட அனைத்து கல்வெட்டுக்களும் தமிழ் மொழியில் வரையப்பட்டுள்ளமையால், அங்கு வாழ்ந்தவர்களும், வழிபட்டவர்களும் தமிழ்ப் பௌத்தர்களே என்பதற்கு மாற்று ஆதா ரங்களைத் தேட வேண்டிய அவசியமில்லை. அதுவுமன்றி, பெரியகுளம் என்பது கன்னியாவை அண்டிய பகுதியாகும்.

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் இராவணனுடன் தொடர்புபட்டதாக புராண இதிகாச வரலாற்று மற் றும் மரபுவழித் தடயங்கள் எடுத்துக் கூறும் ஆதாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் கன்னியா என்னும் புனித பூமிக்கும் - வில்கம் விகாரை என்னும் தமிழ் பௌத்த பூமிக்கும் எவ்வித முடிச்சும் போடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் இந்த விகாரையானது இலங்கையின் ஏனைய பகுதி விகாரைகளுடன் ஒப்பிடுகையில் இனங்களுக்கிடையேயான குறிப்பாக இந்து, பௌத்த சமயாங் களுக்கு இடையேயான சமரசத் தொடர்பைப் புலப்படுத்தும் விகாரையாகவே இருந்து வந்துள்ளது.


எழுத்தாளர்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

–ஆசிரியர்–

-சிறுகதை-

# நிந்தப்பணம்!

-உடப்பூர் வீரசொக்கன்-



விடியலின் கூவலை எழுப்ப கரவெளுத்துக் கொண்டிருந்தது. சேவல் தனது வழமையான குரலோசையை கொக்கரக்கோ.. கொக்கரக் கோ..! வென்று சத்தமிட்டது. இச்சத்தத்தைக் கேட்ட தொழிலாளர்கள் வழிமேல் வழிவைத்து தங்களை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரம் வரும் ஒற்றையடிப் பாதையை நோக்கி நிற்கின்றார்கள்.

வெள்ளிப்பிலே இருள் மங்கிக் கொண்டிருந்த போது, அந்த நிகழ்வு தொழிலாளர் உள்ளங்களை வேதனைப்படுத்தியது. அதை நினைத் துக் கவலைப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்.

கடல் அலைகள் நிசப்தத்துடன், அமைதிப் பூங்காவாக காட்சிய ளித்தது. தென்றல் காற்று தென்னந் தோட்டத்தில் தனித்து நிற்கும் கொட்டா மரம் பல பேரின் குறைகளையும், பிரச்சினைகளையும் வாத, விவாதங்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நிழல் மரம் அது. அத்துடன் தத்தம் துயரங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், நிஷ்டூர துயரங்களையும் பேசும் இடமாகவும் இருந்தது.

வழமையை விட, சோளக் காற்றானது சுழன்று வீசியது. இதனால் தூசு ஒரு பக்கமாகவும், அதனோடு அள்ளுண்டு வீசிய மணல், கண்ணைப் பதம் பார்த்து, பந்தாடியது.

அந்த வேகத்தில் அசைந்தாடிய மரங்கள் உடைந்து, சோபை இழந்து காட்சியளித்தது. கடல் நீர்ப் பாட்டினால் வலை இழுக்க முடியாத நிலை. கடலின் தாக்கத்தின் வேகத்தினால் கடலோரம் கரைவெட்டி, அவலட் சணத்துடன் காட்சியளித்தது.

வலை இழுத்து, களைத்துப் போய் இருந்த தொழிலாளர்களின் மனச் சஞ்சலம் அவர்களை வாட் டிக் கொண்டிருந்தது. பாதையின் சவுலில் காகக் கூட்டம் வலையில் கொத்திக் கொண்டு வந்த மீன்களை தின்னும் முகமாக கா..கா.. கா.. என்ற நாதங்களை எழுப்பி, தனது கூட்டத்தை வரவேற்று நின்றது.

உடப்பிலிருந்து ஒரு மைல் தூரத்தில் முத்துபந்தி. இங்கு தான் வலை இழுக்கின்ற கரைவலைப் பாடு உள்ளது. இந்தப் பாட்டில் மீன் கம்மியாகக் கிடைத்தது. அதனோடு கிடந்த பாசி, பேத்த மீன் கள், வலைச் சிக்கல்களை ஆனையிறக்கம் தரையில் பரப்பி வேறுபடுத்தி, நின்றார்கள் கடற்தொழிலாளர்கள்.

அத்துடன் அவக்.. அவக்கென்று வீடு போக வேண்டி, கெதியாக விரைவுபடுத்தினாலும், சொறி நாய்களின் அருவருப்பு. பறந்து வந்து வலையில் கிடக்கும் மீன்களைக் கௌவிக் கொத்தி எடுக்க முயற்சிக் கும் காகக் கூட்டத்தின் தொல்லைகளும் அலக்கலிப்பை ஏற்படுத்தி நிற்கின்றன.

ஊரின் தென் மூலையிலிருந்து ஓடிவரும் தெப்பத்திலிருந்தபடி, கடையாலில் நின்ற மாயாண்டி வெறித்த தீட்சண்ய பார்வை நோட்டமிட்டவனாக இருந்தாலும் கூட பெரியாண்டியின் வாடியில் பங்குப் பணம் பிரிக்கப்பட்டது.

அதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம், தில்லுமுல்லர்கள் அட்டூழியங்கள், ஜால்ரர் வேலைகள் என்பன ஒரு பக்கம் பேசப்பட்டாலும், மறுபக்கம் குடிவெறியில் தனக்குக் கிடைத்த பங்குப் பணத்தை எதுவென்று தெரியாமல், போதையில் வம்பலக்கும் கும்மலைக் கண்டு, மாயாண்டி வேதனைப்பட்டவனாகக் காணப்பட்டான்.

மாயாண்டி ஊர் ஆலயச் சந்தியில் நின்று பொது சோலி சொட்டை களில் தலை போடுவதில் கெட் டிக்காரன். அத்துடன் அநியாயத்-துக்குத் துணை போகாதவன். யதார்த்தத்துக்குக் குரல் கொடுப்பவ-னாகவும் இருந்தான்.

ஊரில் சந்து, பொந்துகளில் என்ன நடந்தாலும், என்ன விஷயமா னாலும் மாயாண்டிக்கு எட்டிவிடும். என்ன விஷயமானாலும் தட்டிக் கேட்பதிலும், நீதிக்காகக் குரல் கொடுப்பதிலும் நல்லவன். வல்வவன். ஆனால் ஊரின் காவலாளியாக இருப்பான். நல்ல மதிப்புடன் வாழ்ந்-தான்.

அந்தா..! பாரடி..! வாடிய..! நம்ம சனங்களெல்லாம் கூட்டமாக அல் லோலபட்டுக் கொண்டிருக்காங்க.. தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்கில் ஏதோ.. ஜில்மெல் நடந்திட்டுப் போல கிடக்கு..

தெப்பத்தின் ஆணியத்திலிருந்து பட்ட மீன்களை தெரிந்து கொண் டிருக்கும் வைரடப்பன், மாயாண்டியைப் பார்த்து தன் பார்வையுடன் நோட்டமிட்டான்.

ஓமா.. போல கெடக்கு. புடிச்ச மீனுக்கு பங்குகள நேர்மயாக் கொடுத் தால் இந்த நெல ஏற்படாது. வேவாத வெயில் என்றும் பார்க்காமல், பனி, குளிரென நாடாமல், கரவெளுக்கும் முன்னம் பாதையடி, போனால் மாலை எட்டு மணிக்குத் தான் வீடு வாராங்க நம்ம

தொழிலாளர்கள். இந்தக் கொடுமையை வைரடப்பன் கொஞ்சம் சாரா யத்த உள்ளவுட்டு பாலன் சம்மட்டியாரிடம் கேம கேட்டான்.

ஆனால் இது வந்து வேறு விசயமாகக் கிடக்கு. அத்துடன் கூட்டம் அலைமோதி நிக்கிது. பரக்கப்.. பரக்க.. வேவு.. வேவென்று தெப்பத்தக் கரையை நாடி வலிச்சவனாக இருந்தான்.

மாயாண்டி ஆணியத்திலிருந்து தெப்பத்தத் தனித்தான்.
வைரடப்பன் வாடியப் பார்த்தான். தொழிலாளர்கள் கலைஞ்சி போயிட்டாங்க. என்ன ஜில்மல் நடந்ததோ தெரியவில்லை. அதச் சமாளிக்க வடிசாராயம் இரிக்கு தானே என்றான்.

இந்தா பாரும் அய்சே..! நம்ம..! நம்ம ஊர் மீன் சந்தை ஒன்பது மணியளவில் கலைஞ்சிடும். மீன் நாறிப் போனால், குறைந்த விலைக் குத்தான் போகும். சந்தையில் இருக்கும் பெருச்சாலியான வியா பாரிகள் விலைய குறைத்து மீனை எடுப்பாங்க..! வைரடப்பன் தெப்பத் திலிருந்து கடயாலில் சவுலத் திருப்பி, நேரே தெப்பம் எழுக்கும் சாமித் துறைக்கு விட்டான்.

சரி வைரடப்பா..! நேரமும் அத்தாகுத்தியாக இருக்கி. எமக்குக் கிடைத்த மீன்களை நம்ம சந்தையில் விற்பது நல்லது. மீனும் குறைவு தானே.

அரக்கப்.. பரக்க.. மடித்து வைத்து, மறத்துப் போன காலுடன் மாயாண்டி தெப்பத்தை விட்டு, கலைத்துப் போய் இறங்கினான். வீசும் குளிரைத் தாங்க முடியாது, காதை மறைத்திருந்த சால் வையை அவில்து விட்டு, ஈரம் வடிந்த சாரத்துடன், மீன் நாத்தத்தின் கவிச்சலுடன் காட்சியளித்தான்.

தொழிலாளர் கூட்டம் கோப வேசத்துடன் நீதிக்காகப் போராடி நின்றார்கள். தூசன வார்த்தைகள் கனல் பறந்தன. படக்கு படக்கென அடித்த இதயத்துடன் சவரம் பண்ணாத வதனத்தை வருடியவனாக தமது பக்க நியாயங்களை எடுத்துச் சொல்லும் கூட்டத்தில் ஒருவ னாக நல்ல வைரனும் நின்று கொண்டிருந்தான்.

இக்காட்சியைக் கண்டு, ஏது நடக்குமோ..! என்ன நடக்குமோ.. என நினைத்து தனது நடை பயணத்தை விரைவுபடுத்தினான்.

இதைக் கண்ணுற்று நின்றவர்கள் ஏதும் நடந்து விடுமோ..? அஞ்சும் கெட்டும்.. அரிவும் கெட்டும் திண்டாடினார்கள்.

கூட்டம் கூடி நின்றாலும், எந்த வகையான தீர்மானமும் எடுக்க வில்லை. இதை அறிந்த தொழிலாளர்கள் பயந்த பாவனையில் இருந்தனர்.

ஆனால், மாயாண்டி இதையெல்லாத்தையும் அவதானித்தவனாக பார்வையைச் செலுத்தினான். நேற்று மேந்தலப் பாட்டில் வலை வளைப்பில் எல்லப் பிரச்சினை வந்து, கைகலப்பானது. காளியப் பனும், காத்தமுத்தும் அடித்துக் கொண்டனர்.

சம்மாட்டிகளின் ஏவலில் ஏற்பட்ட இச்சம்பவத்தை வேடிக்கையுடன் பார்த்தார்கள். இந்தத் துயரத்தை அறிந்த மாயாண்டி மெய்மறந்த வனாக நிற்க, தனது நோக்கத்தைத் திசை திருப்பினான்.

ஏன்தான் நம்ம தொழிலாளர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள் கிறார்கள். வடிசாராயத்துக்கும், புளிச்ச கள்ளுக்கும் சோடை போவதை எண்ணி வேதனை விளிம்பில் நின்றான்!

விடிந்தால் வெள்ளிக்கிழமை. வழமை போல் கிழமைக்குரிய பங்குப் பணம் பிரிப்பது ஊர் நடைமுறையாகும். இந்த நேரத்தில் தான் கசிப்பு சாராயம் வகை தொகையின்றி கைமாற்றப்படும். அப்போது தொழிலா ளர்கள் மதுபோதையில் வாக்கு வாதப்படுவதிலும், சண்டை பிடிப்ப- திலும் ஈடுபடுவார்கள்.

சின்னவன் சம்மாட்டியார் கோபத்துடன் சீறிப் பாய்ந்தார். **"நீயெல்லாம் என்னிடம் கைநீட்டி வாங்கிய நிந்தக்காரங்களடா.. சொல் கேக்காட்டா பணத்த வைடா.."** இதக் கேட்ட நல்ல வைரவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

சம்மாட்டியார்.. "நாங்க நிந்தக்காரங்கள் தான்.. நீங்க.. சின்ன மீனப் போட்டு, சுறாமீனப் புடிக்கிறீங்க..! தெரியுமா..? மறந்திடாதீங்க. எங்க ஆட்கள் எல்லாம் சாராயத்துக்கும், குடிக்கும் ஏமாந்த சோனகிரிகள்.." "சம்மாட்டியார் ஒரு காலத்தில் நல்ல முடிவு கட்டப்படும். ஞாபகத்தில் வச்சிக் கொள்ளுங்க. சொந்தத் தொழில் உண்டாகும்".

சின்னவன் சம்மாட்டியார்- "இந்தா பாருங்கடா.. ஒங்களையெல்லாம் நாம் தொழிலுக்குச் சேர்ப்பது அங்கிட்டுப் பொரண்டு.. இங்கிட்டு இடுத்துத்தான் முற்பணமான நிந்தப்பணம் தருகிறோம்".

"பத்தாதத்துக்கு வட்டியும் வாங்கித்தான் ஒங்க கைக்கு வருவுது". "இதக் கேளுங்கடா.. எம்மிடம் கைநீட்டிப் பணம் வாங்கினால், தொழில் ஆரம்பித்து முடியும் வரையான காலத்தில் நீயெல்லாம் எங்களுடைய கட்டுப்பாட்டில் நடக்க வேண்டும். மத்தக் கரைவலை பாதையடி நாட முடியாது. இது நம்முடைய ஊர் சம்பிரதாயம்".

சின்னவன் சம்மாட்டியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். பெரியமுத்து சலுகை, உதவி பெறுவதுடன், மற்றைய தொழிலா ளர்களுக்குத் தெரியாமல் கிம்பலமாகக் கொடுப்பார்.

ஆனால் பிச்சை மண்டாடி நீதி, நியாயம் என்பனவற்றை அறியாதவர். சம்மாட்டியாருக்கு வக்காலத்து வாங்குபவர். அநியாயத்துக்குத் துணை போபவர். இந்த பிச்சை மண்டாடியின் செயலைக் கண்டு, காளியப்பனும், பூவடப்பனும் கோபாவேசம் கொண்டனர்.

சின்னவன் சம்மாட்டியாரிடம் தொழில் செய்தாலும், அவர் செய்யும் கொடுமைகளைக் கண்டு கொதித்து எழுந்தனர். "ஆ.. சம்மாட்டியார் சரியான விலை கொடுக்கிறீங்களா..? கமிசன் பணமென்றும், அந்தச் செலவென்றும், இந்தச் செலவென்றும் தொழிலாளரின் கண்ணைக் குத்திப் பங்கை வேல, வெட்டுரிங்க.. ஏன் என்று கேட்டால், அடித்து உதைப்பதுதான் இதற்குப் பதிலா..?"

"பட்ட மீன் கணக்கில் மூன்றில் ஒரு பங்கை சொலயாக எடுத்துக் கொள்ளுரிங்க.. மிகுதி இரண்டு பங்கில் சம்மாட்டியார் பங்கு வாடிப்

பங்கு பத்து வலிப் பங்கு சப்பாட்டுச் செலவு டக்டர் கூலி என பங்கு பங்கெனப் போட்டு, எங்கள ஏமாற்றுவது நல்லதா.. நீங்க நல்லா இருப்பீங்களா.. சம்மாட்டியார்"– என காளியப்பனும், பூவடப்பனும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

"ஒருபக்கச் சார்பாக நிற்கின்ற பிச்சை மண்டாரியின் நக்கித் தின்னும் புத்தி இன்னும் போகவில்லை" என்று மாயாண்டி நேரடியாகச் சொன்ன சொல் தலைகுனிய வைத்தது.

இந்தா பாரு மாயாண்டி, நீ வந்து சுய அறிவில்லாமல் பேசிரா.. இல்லாட்டா மத்தவங்களிடம் வக்கா லாத்து வாங்கிப் பேசிரியா.. அத்துடன் காளியப்பன் கோபக் கனலுடன் தனக்கே உரிய வேறிவந்த பாவனையில் பிச்சை மண்டாரியின் பக்கம் சென்றான். நல்லதம்பி சம்மாட்டியாரின் மேல் வலை மண்டாரியான காளியப்பன் இதையெல்லாத்தையும் அறிந்து கொண்டவனாக இருந்தான்.

இதை உன்னிப்பாகப் பார்த்து நின்ற மாயாண்டி என்ன நடக்கும், ஏது நடக்கும் என வேடிக்கை உணர்வோடு நின்றாலும், இந்த அநியாயத்துக்குத் துணை போக முடியாதெனவும், எப்படிப் பங்குப் பணம் நீதியாக பகிர்ந்தளிக்கப்படுமா..? என அங்கலாய்த்தவனாகக் காணப்பட்டான்.

இந்தாங்கடா.. நாம் சண்டை பிடிப்பதினால் ஒன்றும் நடக்காது. பங்குப் பணம் பிரிக்கும் போது நியாயத்தைக் கேட்டு, போராட வேண்டும். அதவுட்டு நமக்குள்ள சண்டை பிடிப்பதினால் ஒன்றும் நடக்காது.

இதக் கேட்ட எல்லோரும் கூட்டத்தை விட்டு, நழுவல் போக்கைக் கடைப்பிடித்தனர். மாயாண்டியும், காளியப்பனும் வலவலவென்று பேசிக் கொண்டிருந்தனர்.

சின்னடப்பன் இத உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான். நாம் ஒன்றிணைந்து இந்தச் சம்மாட்டியாரின் கொட்டத்தை அடக்கிவுட வேண்டும்.

காளியப்பன் தனது மனதில் காணப்பட்ட துயரத்தை கொட்டித் தீர்த்தான். நாமும் வல இழுக்கும் தொழிலாளர்கள். நாம் அநியாயத் துக்கும், கொடுமைக்கும் வாளா இருந்திட முடியாது. சம்மாட்டிகள் மண்டாடியாரை கையில் வச்சிக் கொண்டு, பங்குப் பணத்தில் வெட்டு, கூலியென்று சொல்லி அதில் அநியாயம்.. தொழிலில் இருந்து விலகும் போது, பொய்க் கணக்கு, மேலதிக தண்டப்பணம் அறவிடல் என்பன போன்ற இத்தியாதி.. இத்தியாதி..

மாயாண்டி எப்போது தனக்குச் சந்தர்ப்பம் கிட்டுமென எதிர்பார்த் தான். பங்குப் பணம் பங்கிடும் வாடியை நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினான். வழமை போல் பஞ்சாயத்தின் கூட்டம் திரௌபதையம்மன் ஆலயத்தில் கூடியது. சம்மாட்டிமார்கள், தொழி லாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். நல்லதம்பி சம்மாட்டியார் தொழிலாளர்களைக் கடுமையாகப் பார்ப்பதுமாக, பசப்பு வார்த்தை கூறித், தொழிலா ளர்களை தம் பக்கம் சேர்ப்பதுமாக, குள்ளநரி போல் ஒதுக்குப் புறமாக இருந்த மணல் மேட்டில் அமர்ந்து கொண்டார்.

ஊர்த் தலைவர் முத்துக்கறுப்பன் வழமை போல் பேசும் போது:- **“இக்கூட்டமானது ஊர் நன்மை கருதி நடத்தப்படுகிறது. அபிவிருத் தியுடன், நமக்குள்ள பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதே இக் கூட் டத்தின் முக்கிய நோக்காகும். நமது ஊரின் முதுகெலும்பு கடற்தொழி லாளர்கள். அவ்வப்போது பிரச்சினைகள் எழுவது சகஜம்”**– என்றார்.

மாயாண்டி தனது கருத்தைப் பதிவு செய்தார். **“நமது ஊரில் பல சம்மாட்டிமார்கள் இருக்கிறார்கள். எல்லோரும் தொழிலாளர் பக்கம் இருந்தாலும், ஒருசில சம்மாட்டிகளின் செயல் பொறுக்க முடியாது. அந்தச் செயல் விரும்பத்தகாதது. பட்ட மீனுக்கு நீதியான முறையில் விலை இல்லை. நிறுவையில் கொள்ளை. பங்குப்பணம் கொடுக்கும் போது ஜில்மல். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்”.**– என்றார்.

ஆனால் இப்படி எழுந்தமான கேள்விகளை எழுப்புவது அபத்தம்– என்பதை இடைமறித்து வைரன் சம்மட்டியார் தமது பக்க நியாயங்களை

எடுத்துச் சொல்லும் போது:- "நாங்கள் கேட்கும் போதெல்லாம் காசு கொடுப்போம். இந்தப் பணத்தின் பெறுமதி தொழிலாளர் கூட்டத்துக்குத் தெரிவதில்லை. எங்கள் பக்கத்தில் குறையிருந்தால், நேரடியாகச் சொல்ல வேண்டும். மீன் பட்டவுடன் கசிப்பு தேவை. திருவிழா கொண்டாட்ட மென்றால் எங்கள் பணம் தான் அவர்களின் விழாவைச் சிறப்பிக்கிறது. மரண சாவும் வந்தாப் போதும், அவன்ர எட்டு இழவுக்கு எங்களுடைய பணம் தான் தேவைப்படுகிறது கெடக்கும் பணத்த மிச்சம் பிடிப்பதே இல்லை. பாட்டியென்றும், கீட்டியென்றும் காச நாசம் செய்கிறான். இந்தத் தொழிலாளர் கூட்டம் உணர வேண்டும்".

காளிமுத்துச் சம்மாட்டியார் இதில் குறுக்கிட்டு- "இல்லப்பா.. நிந்தப்ப– ணம் வாங்கினால், இந்தக் கரையில் எழு மாதத்துக்கும் தொழில் செய்ய வேண்டும். இது நம்மட ஊர் வழக்கம். இடையில் பணத்தக் கட்டித் தொழிலை நாசம் செய்ய முடியாது. இலட்சக்கணக்கான முதலப் போட்டு இந்தத் தொழிலச் செய்கிறோம்"– என்றார்.

தொழிலாளர் கூட்டத்திலிருந்து காத்தலிங்கம் கோபத்தில்:- "இல்ல சம்மாட்டியார் இத எங்களால் ஜீரணிக்க முடியாது. நிந்தப்பணம் வாங்கினால் நாங்கள் அடிமையல்ல. இது எழுதப்படாத சட்டம் என்பத நெனைங்க.. தொழில் செய்யும் காலத்தில் வூட்ட வுட்டு அதிகாலையில் பாதையடி செல்லுகிறோம். மாலை எழுமணிக்குத் தான் வூடு வாரோம். வெயில், குளிர், பனி.. என்று பாராமல் மாடா ஒழைக்கிறோம். தொழி லாளர்களான நாங்க ஒழைப்பு.. ஒழைப்பு.. என ஓட்டாண்டியாக போவதுதான் கண்ட மிச்சம்! கசிப்பத் தந்து எம்மல ஏமாத்துவதுதான் நாங்கள் கண்ட பலன். அத்துடன் எங்க புள்ளகளப் படிக்க வைக்கவோ, ஏன் நாங்க வூட்டக் கட்டவோ முடியவில்லை. கைநீட்டிப் பணம் வாங் கியமைக்காக அடிப்பதும், ஒதைப்பதும் ஒங்க வேல"– என்றார்.

தொழிலாளியான மாயாண்டி சபை நடுவில் எழுந்து நின்று, "எமது ஊர் நன்மை கருதி இருபத்து எட்டு பாடுகள் பிரிக்கப்பட்டன. இந்தப் பாட்டில் ரொட்டேசன் முறையில் தொழில் நடைபெற்று வந்தன. சம்மாட் டிகளெல்லாம் இந்த முறையை மாற்றி, லைசன் பாடுகளாக்கி, தொழில் முறையைச் செய்து வருகிறீங்க.. ஆனால் இது ஒங்க

பரம்பரைச் சொத்தாகி விட்டது. கடல நம்பி புதுசா ஒருவர் கடலில் தொழிலைச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இது நல்லதா..? இது ஒங்கட நயவஞ்சக நரிப் புத்தியக் காட்டுது. நல்லாச் சிரிங்க..!"

வண்டியன் சம்மாட்டியார் எழுந்தார். தனது பேச்சைத் தொடர்ந்தார். "இந்தப் பாடுகளெல்லாம் லைசன் பாடாகியது ஒரு சில சம்மாட்டி யார்க–ளின் சுயநலம். அத நான் மனதார ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இன்று லைசன் பாடுகளை மட்டும் தனது பெயரில் வச்சிருக்கும் சம்மாட் டிமார்களும் இருக்கிறாங்க.. இது உண்மைதான். அவர்களுக்கு ஆப்பலமோ, பாதையோ, வள்ளமோ, வாடிகள் கூட இல்லைதான். இந்த லைசனைக் காட்டி, வங்கியில் லட்சக்கணக்கான கடன்களைப் பெற்று, ஜாலியாக வாழ்கிறாங்க.. இதத் தட்டிக் கேட்கத் திராணி இல்லையே நம்ம தொழிலாளர்களுக்கு..! இதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தால், லைசன் ரத்து செய்யப்படும்"– என்றார்.

காளியப்பன் எழுந்தான். அவனின் கரடு முரடான பேச்சு சம்மாட்டி களின் மனதைப் புண்படுத்தியது. "எங்கள் தொழிலாளர்கள் அப்பா விகள். அவர்களை ஏமாற்றாத முறையில் நடந்து கொள்ளுங்கள். உழைக்கும் தொழிலாளர்களுக்கு வருஷத்தில் எதத்தான் கொடுக்கிறீங்க.. போனஸ் கொடுக்கிறீங்களா.. ஏன் சன்மானவதை வழங்குறீங்களா..? இல்லையே. மீன் கூடுதலாகக் கிடைத்தவுடன், கசிப்பைச் சந்தோஷமாக வாங்கிக் கொடுப்பதோடு, அதையும் பொதுக் கணக்கில் அழித்தும்வுட்டு ரிங்க.. சம்மாட்டிமார்கள்!

பிடித்த மீனின் மொத்தப் பணத்தில் ஒரு பங்கைச் சுலையாக எடுக்கிறீங்க.. மத்த இரண்டு பங்கில் மேலும் தனக்கும், எனது புள்ள குட்டிகளுக்கும் அதில் கழிவு செய்கிறீங்க.. இதெற்கெல்லாம் ஒடந்தையாக இந்த மண்டாடியும் தொணையாக இருக்கிறான்".

அதில் ஒருவனாக வைரடப்பன் தனது கருத்தை முன்வைத்த போது:- "இத்தொழிலைச் சீராக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்றால், நீதி, நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். மீனை டக்டரில் ஏற்றி, வாடியில் மீனை நிறுக்கும் வரை தொழிலாளர்களின் கண்காணிப்பில் நடாத்த வேண்டும்".

இராம சம்மாட்டியார் எழுந்து, ஒரு முறை தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். அங்காலயும், இங்காலயும் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கோபத்துடன்.. "இந்தத் தொழிலாளர்கள் எம்மிடம் கைநீட்டி நிந்தப் பணம் வாங்கிய தயோலிகள். சம்மாட்டிகளான நாங்கள் பயந்து தொழில் நடத்தவில்லை. எங்கள அசைக்க முடியாது. நிந்தப்பணம் வாங்கிய பொருக்கியல். மரணம் ஏற்பட்டால், சாவுக்கு எனவும், எட்டு-எழவுக்கென்றும் சல்லி.. சல்லியென வந்து கேட்டு, எங்க முத்தத்து மணலைக் காலால் எடுத்துச் சென்ற பரதேசிகள். நாளை பார்ப்போம். கைநீட்டி நிந்தப்பணம் வாங்கிய நீயெல்லாம் தோணியடி வராவிட்டால், நடப்பது வேறு".

அமைதியாக இரு சாரார்களின் கருத்துக்களையும் கேட்ட பொது மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

மாயாண்டி தன்னிடமுள்ள கிழிந்த வலைகளைப் பிரித்து, சுடர்விட்டுக் காட்சியளித்த நாவமரத்தின் கீழ் காயவைத்தான். அடே மாயாண்டி.. அடே மாயாண்டி.. எனக் காளியப்பன், சின்னாண்டி, பெரியாண்டி, கமலமுத்து ஆகியோர் கொரவைத்துக் கொண்டு, வீட்டை வந்தடைந்தார்கள். வந்தடைந்தவர்களை அன்பாக உபசரித்த மாயாண்டி, தன் மனைவியைப் பார்த்து, குட்ட முத்துக்காளி. "என்ன-ங்க..!" "சாயத்தக் குறைத்து வந்தவர்களுக்கு தேனீர் கொடும்மா.."- என சாவதனமாகக் கூறினான்.

நண்பர்கள் எல்லோரும் ஒரே குரலில் நாம் இந்த நிந்தப்பண முறையிலிருந்து விடுபட வேண்டுமென்று கூறி நின்றார்கள். இதற்கு ஒரே வழி சொந்தத் தொழிலைச் செய்ய வேண்டும். அது எப்படியென மற்றவர்கள் வினயமாகக் கேட்டார்கள். அதற்கு மாயாண்டி, "மீன்பிடிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம் அரசாங்கத்தி டமிருந்து நிவாரணங்களைப் பெற்று, சகநாதாரத் திட்டத்தின் மூலம் வலையெனவும், தெப்பமெனவும், இயந்திரமெனவும் கடன் அடிப்படையில் நன்மைகளைப் பெறமுடியும்"- என்றார்.

நல்ல ஐடியா.. நல்ல திட்டமென எல்லோரும் ஒரே குரரெழுப்பி, சந்தோஷத்துடன் உள்ளம் பூரித்து நின்றார்கள். தொழிற் சங்கத்தை அமைக்க வேண்டித் தொழிலாளர்கள் அம்மன் ஆலய முற்றவெளியில் ஒன்று கூடி நின்றார்கள்.

# இவரைத் "தென்றல்" வாழ்த்துகிறது!
# 30வருட ஆசிரியர் சேவையிலிருந்து திருமதி ஜெகதீஸ்வரி நாதன் ஓய்வு!

- திருமதி. கவிதா கிருபாகரன் -



அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் அவதரித்த திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் தனது 60 ஆவது வயதில் 23.04.2020 அன்று ஓய்வு பெற்றார். இவர் 1985 - 1990 காலப்பகுதியில் தம்பிலுவில் பொதுநூலகத்தில் நூலக உதவியாளராக பணியாற்றி வந்தார். பின்பு 1990இல் கலைப்பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று, தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பித்தார். அக்காலகட்டத்தில் க.பொ.த(சா.தர), உயர்தர மாணவர்களால் வெளியிடப்பட்ட **'முத்தாரம்'** சஞ்சிகைக்கு பொறுப்பாசிரியராக இருந்தார்.

அகிலஇலங்கை தமிழ்மொழித்தினப் போட்டி நிகழ்வுகளுக்கு கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல், வில்லுப்பாட்டு போன்ற பல நிகழ்ச்சிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து வெற்றிபெறவும் செய்தார். இந்துசமயம் கற்கும் மாணவர்களுக்கு **'சனாதனம்'** எனும் இந்து சமய வினா விடைத் தொகுப்பொன்றினையும் எழுதி வெளியிட்டார். 2000ஆம் ஆண்டுமுதல் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து வெளிவரும் **'கலசம்'** சஞ்சிகையில் இவரது கட்டுரைகள் இடம்பெற்று வருகின்றன. திருக்கோவில் கல்வி வலயத்தால் 2019 இல் **"நல்லாசிரியர் விருது"** வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2018இல் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தேசிய ரீதியில் 3ஆம் இடம் பெறவும் இவர் உதவி செய்தார்.

-நீத்தார் நினைவு-

# மறைந்தும் மறையாத கலைப் பொக்கிஷம் அமரர் சபாநாதன்!

- பழுவூரான் -



அமரர் தில்லைநாதன் சபாநாதன் அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியில் 1969 தொடக்கம் 1971 வரை இயந்திரவியல் தொழில்நுட்ப வியலில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்று, டம்புள்ள ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் வேலை செய்தார். தனது தொழில் திறமை காரணமாக நைஜீரியா நாட்டுக்குச் சென்றார்.

நைஜீரியாவில் இயந்திரவியல் பொறியியலாளராகக் கடமை புரிந்தார். பின்னர் நாட்டு நிலைமை காரணமாக கனடா நாட்டுக்குச் சென்றார். அங்கு **"அஜி ஓட்டோ வேக்ஸ்"**- எனும் நிறுவனத்தைச் சொந்தமாக நடாத்திக் கொண்டிருந்தார். இந்நிறுவனம் பல அளப்பரிய பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தமை கண்கூடு.

அத்தோடு கனடா நாட்டில் பல்வேறு கலை நிகழ்வுகளை நடாத்திக் கொண்டிருந்த **"நாதன்ஸ் இசைக்குழு"**- வுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்திப் பெருமை சேர்த்திருக்கிறார்.

இந்நிலையில் அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பா கும். இவருக்குத் **"தென்றல்"**- தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரி வித்துக் கொள்கிறது.

## வாசகர் நெஞ்சம்

# உன் பணி தொடரட்டும்...



"தென்றல்" (சித்திரை– ஆனி) –2020 இதழ் கிடைக்கப் பெற்றது. மிக்க நன்றி. அதிதிப் பக்கத்தில் கவிக்கோ வெல்லவூர்க்கோபால் அவர்கள் தொடர்பாகத் "தென்றலின் தேடல்"– பகுதியில் இடம்பெற்ற தகவல்கள் மிகவும் சிறப்பாகவும், அவர் தொடர்பாக ஆய்வினை மேற் கொள்பவர்களுக்கு பூரண தகவல் பெட்டகமாகவும் அமைந்தி ருந்தது. அவர் எழுதிய வரலாற்று நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பெற்ற விருதுகள் போன்ற விடயங்கள் அவரின் ஆளுமையைப் பறைசாற்றுவனவாக அமைந்திருந்தது. அதேபோலவே நீத்தார் நினை வில் ஊரறிந்த, நாடறிந்த, உலகறிந்த அறிவிப்பாளர் எஸ்.சண் முகரெத்தினம் பற்றிய குறிப்பும், எஸ்.துஷ்யந்தி எழுதிய "வாகரை தொடர்பான" கட்டுரையும், "தென்றலின்"– கனதிக்கு வலுச் சேர்ப்ப– னவாக அமைந்திருந்தது எனக் கூறினால் அது மிகையாகாது. இவ்வாறு பெருமைகள் பல பொருந்திய "தென்றலே"– நீ நீடுழி வாழ அடியவளின் நல்வாழ்த்துக்கள்!

திருமதி அ.சிவகுமார்
செங்கலடி.

---

# "தென்றலே"– நீடுழி வாழ்க!!!

செதுக்குகின்ற நறும் கவிதைச் சிறப்பு கண்டோம்!
இன்னும் கட்டுரை, சிறுகதைச் சிறப்பை இரசித்தோம்!
இது போல இனிப்பான சுவை அமிழ்தம் தந்தெம்
அகம் மகிழ்ந்திட ..

வாழ்த்தும்
ந.தர்ஷினி
யோகபுரம், மல்லாவி.

ஆரையம்பதியில்......

அழகிய 22 கரட்
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி





**அபிராமி ஜுவல்ஸ்**

பிரதான வீதி,
ஆரையம்பதி – 02
தொ.பே: 065-2246944
077-6506329

AD/0008

அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய வேண்டிய
ஒரே இடம் தங்க நகைகளின்
சொர்க்காபுரி



**சொர்ணம் நகை மாளிகை**

16, புனித அந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152


212, 214 பிரதான வீதி, கல்முனை.
T.P: 067 2229121/2229860

59, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
T.P: 067 2220191

AD/0040

**LADSHANA**
**STAMP & DIGITAL PRINTING**

AD / 0024




Rubber Stamps | Digital Printing | T.Shirt (Sublimation & Emproding) | Laser Cutting & Engraving
Digital Offset | Plastic ID | Shield | Mug (Personalized Gift Printing) | Wedding Card Est....

39A, BAILY ROAD, ARASADY, BATTICALOA.
ladshana@gmail.com 065 2224048, 077 6915574




இவ்வருடம் Scholarship பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான...

# Spoken English Classes

ஆங்கிலம் கற்பது ஒரு சுவாரசியமான உற்சாகமூட்டக்கூடிய செயலாக அமைவது முக்கியமானதாகும். ஆங்கிலத்தில் உரையாடுதலும், அம்மொழியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்கான அத்திவாரமாக அமையும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கு அமைய சிறுவயதிலிருந்து ஆங்கிலம் கற்பவர்களின் ஆங்கில உச்சரிப்பு சிறந்ததாக அமைவதுடன் சிறந்ததொரு அடிப்படை அறிவையும் பெற்றுக்கொள்கின்றனர். Headwayயில் சிறுவயதிலிருந்து பெற்றுக் கொள்ளும் ஆங்கில அறிவு அவர்கள் பெரியவரானதும் அவர்கள் சார்ந்த துறைகளில் சிறந்து விளங்க உறுதுணையாக அமைவதை நாங்கள் கண்கூடாக அறிந்து வருகிறோம்.

- ✓ Once a week class
- ✓ Activity based learning
- ✓ Maximum 20 students in a class
- ✓ Special discounted course fee
- ✓ Experienced teacher panel
- ✓ Chance to sit for Cambridge exams in 2020

Register Now

**Headway**
School of Languages

AD/0006

**12, Thamaraikerny Road, Arasady, Batticaloa T: 065 492 4042 | 065 222 5612**